# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

**இதழ் 397**

சனி, 04 யூலை, 2026 |

பக்கங்கள் 21

www.ilakku.org













# வசந்த கரன்னாகொட கைது



இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரன்னாகொட கைது செய்யப்பட்டுள்ளார். கையூட்டல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவினால் அவர் கைது செய்யப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவை இலங்கை கடற்படையில் இணைத்துக்கொண்டு பிரித்தானிய கடற்படை நிறுவகத்தில் பயிற்சிக்கு அனுப்பியமை தொடர்பில், விளக்கமளிப்பதற்காக ஆணைக்குழுவுக்கு வசந்த கரன்னாகொட நேற்று (03) அழைக்கப்பட்டிருந்தார்.

வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதன் பின்னர், கையூட்டல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவினால் அவர் கைது செய்யப்பட்டார். எவ்வாறாயினும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட சீராய்வு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நிதி மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் தமக்கு எதிராக சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிலுள்ள “சதி” என்ற குற்றச்சாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா மாநகர சபை முதல்வரைப் பதவி நீக்கும் செயற்பாட்டுக்கு இடைக்காலத் தடை



வடமாகாண ஆளுநரால் வவுனியா மாநகர முதல்வரின் பதவி பறிக்கப்பட்டதை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால தடைகோரிய மனு வவுனியா மேல்நீதிமன்றில் இன்று (03) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்குத் தொடுநர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்தி ரன் முன்னிலையாகியிருந்தார். வவுனியா மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சு. காண்டீபனும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

மனுவை பரிசீலித்த வவுனியா மேல் நீதிமன்றம், வவுனியா மாநகர முதல்வரை பதவி நீக்கி வடமாகாண ஆளுநர் எடுத்திருந்த தீர்மானத்திற்கு ஜூலை 15ஆம் திகதி வரை இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்தது.

இதேவேளை, வவுனியா மாநகர முதல்வர் பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

## டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கான உதவியை அரசாங்கம் அறிவித்தது



“டித்வா அனர்த்தத்தில் முழுமையாக பாதிக்கப்பட்ட மலையக தோட்ட மக்களுக்கு காணி உரிமை இல்லாவிட்டாலும் ஏனையவர்களுக்கு வழங்கப்படுவது போன்று 50 இலட்சம் ரூபாவுடன் 10 பேர்ச் காணி யில் 650 சதுர அடியைக் கொண்ட வீடு ஒன்றை நிர்மாணித்துக்கொடுக்க தீர்மானித்திருக்கிறோம் என்றும் அதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்டுள்ளது என்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில், “தோட்டப்புறங்களில் தனியான

தொடர்ச்சி: பக்கம் 17

## சூடானின் துணை ராணுவப் படை இனச் சுத்திகரிப்பை மேற்கொண்டு வருகின்றது.



சூடானின் துணை இராணுவப் படை (RSF), 2024 மற்றும் 2025-க்கு இடைப்பட்ட காலத்தில் எல்-ஃபாஷர் (el-Fasher) நகரத்தின் மீது நடத்திய தாக்குதல்களின்போது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களையும் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாக மனித உரிமை அமைப்பான ‘ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்’ குற்றம் சுமத்தியுள்ளது.

புதன்கிழமை(01) வெளியிடப்பட்ட அறிக்கையில், மேற்கு சூடானின் வடக்கு டார்ஃபர் மாநிலத் தலைநகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் 2024-ன் தொடக்கத்திலிருந்தும் அக்டோபர் 2025 வரையிலும் எவ்வாறு கொல்லப்பட்டனர், காயமடைந்தனர், தாக்கப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர் மற்றும் சிறைபிடிக்கப்பட்டனர் என்பதைத் தாங்கள் ஆவணப்படுத்தியுள்ளதாக அது தெரிவித்துள்ளது.

“கொலை, கட்டாய இடப்பெயர்வு, சிறைவாசம், சித்திரவதை, பாலியல் வன்கொடுமை, பாலியல் அடிமைத்தனம், பிற வகையான பாலியல் வன்முறைகள், அடிமைப்படுத்துதல், இன அழிப்பு மற்றும் துன்புறுத்தல் ஆகியவை RSF-இன் குற்றங்களில் அடங்கும்” என்று அந்த அறிக்கை கூறுகிறது.

“லட்சக்கணக்கான குழந்தைகள் இடம்பெயர்ந்துள்ளனர்; அவர்களில் பலர் தாக்குதல்களின்போதோ அல்லது தப்பிச் செல்லும்போதோ மீண்டும் மீண்டும் உயிரிழப்பு மற்றும் காயத்தின் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர். எண்ணற்ற குழந்தைகள் அனாதையாக்கப்பட்டுள்ளனர். மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்கள் கடுமையான ஆபத்துகளை

தொடர்ச்சி: பக்கம் 17

## காசா மக்களை கட்டுப்பாட்டு முகாம்களுக்கு அனுப்ப திட்டம்



காசா மக்களைக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட “தங்குமிடங்களுக்கு” மாற்றும் திட்டம் சில வாரங்களுக்குள் தொடங்கும் என்றும், அதற்கான அடித்தளம் ஏற்கனவே கட்டப்பட்டுவிட்டது என்றும் ஒரு இஸ்ரேலியப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை அங்கீகரித்து செய்தி வெளியிட்ட, இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு ஆதரவு ஊடகமான இஸ்ரேல் ஹயோமின் படி, ரஃபா அருகே உள்ள டெல் அல்-சுல்தானில் தொடங்கி, பொதுமக்கள் வேலியிடப்பட்ட “மனிதாபிமான முகாம்களுக்கு” அனுப்பப்படுவார்கள். டிரம்ப் நிர்வாகத்தின் “அமைதி வாரியத்தின்” கீழ் உள்ள ஒரு பன்னாட்டுப் படை, புதிதாகக் கட்டப்பட்ட தளத்திலிருந்து அந்தப் பகுதிகளைக் கண்காணிக்கும், அதே நேரத்தில் இஸ்ரேலிய இராணுவம் மஞ்சள் கோட்டிற்கு அப்பால் “தனது பிடியைத் தொடர்ந்து பராமரித்து ஆழப்படுத்தும்”.

ஹமாஸை “மக்கள், நிலப்பரப்பு அல்லது வளங்கள் இல்லாமல்” ஆக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு “இடுக்கி நகர்வு” என்று அந்தப் பத்திரிகை இதை வெளிப்படையாக விவரிக்கிறது. அந்தப் பகுதிகளுக்கு வாகன அணிவகுப்புகளும் உதவிகளும் கிடைக்கும், ஆனால் மீண்டும் கட்டியெழுப்பத் தேவையான கான்கிரீட் கிடைக்காது. இராணுவம் “சர்வதேச விமர்சனத்தின் வரம்பிற்குக் கீழே இருக்கும் அதே வேளையில், இலக்கு வைக்கப்பட்ட படுகொலைகளின் வேகத்தைத் தொடரும்” என்று ஒரு இஸ்ரேலிய அரசியல் வட்டாரம் அந்தப் பத்திரிகையிடம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 10

## இந்தியாவின் ‘நீலப் புரட்சி’



உலகின் இரண்டாவது பெரிய மீன் உற்பத்தி நாடான இந்தியாவின், கடலோரப் பகுதிகள் இல்லாத வடக்குப் பகுதி விவசாயிகள் இப்போது நீர்வாழ் உயிரின வளர்ப் பில் (aquaculture) ஈடு பட்டுள்ளனர்; இது இந்தியாவின் ‘நீலப் புரட்சி’யின் (Blue Revolution) ஒரு பகுதியாக நாட்டின் இறால் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்துள்ளது.

அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, கடந்த ஆண்டு இந்தியாவின் மொத்த கடல் உணவு ஏற்றுமதி மதிப்பு 8.46 பில்லியன் டாலராக இருந்தது; இதில் இறால் ஏற்றுமதி மட்டும் 66% பங்களிப்பை அளித்துள்ளது.

முன்பு கோதுமை மற்றும் நெல் பயிரிட்ட விவசாயிகள், இப்போது கடலோரப்

தொடர்ச்சி: பக்கம் 17

## பிரித்தானிய காலனித்துவப் படைகளால் திருடப்பட்ட கலாச்சாரப் பொருட்கள் ஒப்படைப்பு



19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய காலனித்து ஆதிக்கப் படைகள் மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியா மீது படையெடுத்தபோது திருடப்பட்ட பெனின் வெண்கலச் சிலைகள் உட்பட 18 கலாச்சாரப் பொருட்களை சுவிட் சர்லாந்து நைஜீரியாவிடம் திருப்பிக் கொடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்படைப்பு நிகழ்வு, திங்களன்று(29) லாகோஸில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் நடைபெற்றது. அங்கு, நைஜீரியாவின் கலாச்சார அமைச்சர் ஹன்னது மூசா முசாவா மற்றும் சுவிஸ் கூட்டாட்சி கவுன்சிலர் எலிசபெத் பாம்-ஷ்னைடர் ஆகியோரும், கலாச்சாரச் சொத்துக்களின் இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் திருப்பிக் கொடுத்தல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் இருதரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

தொடர்ச்சி: பக்கம் 19

# ஏக்கிய ராஜ்யவைத் தடுக்க: விஜய்க்கு தமிழ்த் தேசியப் பேரவை கோரிக்கை

-பா.அரியநேத்திரன்-



தமிழ்த் தேசியப் பேரவையினர் சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய்யை நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். குறித்த சந்திப்பானது நேற்று (03.07.2026) தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

தமிழ்த்தேசிய பேரவை என்ற காகித தலைப்புடன் ஏழுபேர் இதில் கலந்துகொண்டனர். ஏழு பேரில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி எனும் பெயரில் அகில இலங்கை தமிழ் காங்கிரஷ் கட்சியில் தேர்தலில் அரசியலில் பங்கேற்கும் ஐந்து உறுப்பினர்களான




1. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் – தலைவர், தமிழ்த் தேசியப் பேரவை; நாடாளுமன்ற உறுப்பினர்.
2. செல்வராசா கஜேந்திரன் – பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி; முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
3.. தருமலிங்கம் சுரேஷ் – தேசிய அமைப்பாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
4. கனகரட்ணம் சுகாஷ் – உத்தியோகபூர்வ பேச்சாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியும்,
5. நடராஜர் காண்டீபன் – கொள்கைப் பரப்புச் செயலாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியும்,

இவர்களுடன்

6.. பொன்னுத்துரை ஐங்கரநேசன் – தலைவர், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
7. கே. வி. தவராசா – தலைவர், ஜனநாயகத் தமிழர் கட்சி; ஜனாதிபதி சட்டத்தரணி

மூன்று கட்சிகளை சேர்ந்த ஏழுபெயர் கொண்டவர்களே தமிழ் நாட்டு முதல்வருடன் சந்தித்து பேசி ஐந்து பக்க அறிக்கையில் ஈழத்தமிழர்களின் கடந்தகால அரசியல் தீர்வு விடயங்களில் மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் ஏமாற்றிய விடயங்களுடன் ஈழத்தமிழ் மக்கள் தற்போது எதிர்நோக்கும் அரசியல், மனித உரிமைகள் பிரச்சினைகள், ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறை ஒழிக்கப்பட்டு தமிழர் தேசத்தின் இறைமையை அங்கீகரிக்கும் சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வின் அவசியம், ஈழத்தமிழர் இனவழிப்புக்கு சர்வதேச சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம், இந்திய–ஈழத் தமிழ்க் கடற்தொழிலாளர்களின் பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணும் நடவடிக்கைகள், இந்தியாவில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதாக கூறப்பட்டாலும். அவர்களால் பையளித்த ஐந்துபக்க அறிக்கையில்.

புதிய அரசியல் யாப்பு தயாரிக்கும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசின் ஆட்சியில் உள்ள அநுர குமார திசநாயக்கா அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட “ஏக்கிய ராஜ்ய” (ஒற்றையாட்சி) அரசியல் அமைப்பின் ஆபத்துகள் குறித்தும் அதனை பாதுகாக்க வேண்டுமாயின் 1985, ல் இந்தியாவின் அனுசரணையுடன் பூட்டான் தலைநகர் திம்பு மாநாட்டில் ஈழத்தமிழ் கட்சிகளால் ஏற்றுக் கொண்டதற்கு அமைவாக புதிய அரசியல்யாப்பு அமைய வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இறுதியாக அவர்கள் சுட்டிக்காட்டிய விடயம் கவனிக்க

**தொடர்ச்சி: பக்கம் 17**

## ஆசிரியர் தலையங்கம் | 04 யூலை, 2026

## வான்வழி ஆயுதப்பலமே உலகின் புதிய அரசியல் ஒழுங்குமுறை நாடுகளுடன் உரையாடல்கள் மூலமே இறைமையைப் பேணலாம்

பிரித்தானியாவின் படைத்தறையை நவீனப்படுத்த 15 பில்லியன் பவுண்ஸ்களை மேலதிகமாக ஒதுக்கியுள்ள பிரித்தானியப் பிரதமர் கியர் ஸ்டாமரின் புதிய பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் பிரித்தானியாவில் வான்வழித்தாக்குதலுக்கான ஆயுத உற்பத்தியைப் பெருக்கும் நோக்கினைக் கொண்டுள்ளது. ஆயினும் வான்வழி ஆயுத உற்பத்திகள் அனைத்துலகத் தன்மை உள்ளதாக உள்ளதால் இந்த முதலீட்டின் வழியாக வெளிநாடுகளிலேயே வேலை வாய்ப்புக்கள் உருவாகுமெனவும் இதனால் உட்கட்டுமானங்களுக்கான நிதி பாதுகாப்புத்துறைக்குச் செலவிடப்பட உள்ளதால் பிரித்தானியாவில் 2029-30 காலப்பகுதியில் 10000 வேலையிழப்புக்கள் ஏற்படுமென பிரித்தானியாவின் த கார்டியன் ஆங்கில நாளிதழின் பாதுகாப்புக்கொள்கை குறித்த கொள்கை ஆசிரியர் கிரான் (Kiran Stacey-Policy editor) தனது பாதுகாப்புக்கான “உட்கட்டுமான வெட்டுக்கள் 10000 வேலையிழப்புக்களை ஏற்படுத்துமென ஆய்வுகள் காட்டுகின்றன” என்ற தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும் புதிய தலைமுறைக்கான நவீன கப்பல்களை கட்டுவதற்கும் இந்தோ பசுபிக் கடற் பிரதேசங்களில் ஏவுகணைக் குவிமாடங்களை அமைப்பதற்குமாக 1 ட்ரில்லியன் டொலர்களை படைத்துறைக்கு ஒதுக்கியுள்ளது. சீனாவும் தனது படைத்துறைக்கு 282 பில்லியன் டொலர்களை முன்னையதை விட 6.9 வீத அதிகரிப்புடன் ஒதுக்கியுள்ளது. ரஸ்யாவும் 838.7 பில்லியன் டொலர்களை தனது படைத்துறையில் செலவிடவுள்ளது.

பிரான்ஸ் 500 பில்லியன் டொலர்களை தனது படைத்துறைக்கு ஒதுக்கியுள்ளது. யேர்மன் 127 பில்லியன் டொலர்களை தனது படைத்துறைக்கு ஒதுக்கியுள்ளது. இந்தியாவும் தனது 2026-27 86 பில்லியன் டொலர்களை முன்னையதை விட 18 வீத அதிகரிப்புடன் படைத்துறைக்கு ஒதுக்கியுள்ளது. சிறிலங்காவும் தனது படைத்துறைக்கு 1.5 பில்லியன் டொலர்களை ஓதுக்கியுள்ளது. நாடுகளின் படைத்துறைக்கான இந்த நிதி ஒதுக்கீடு இன்றைய உலகின் அரசியல் ஒழுங்குமுறை வான்வழி ஆயுதப்பலமே என்பதாக நடைமுறையில் மாறியுள்ளது. என்பதை இலக்கு முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

நீங்கள் இந்த ஆசிரிய தலையங்கத்தை வாசித்துக் கொண்டிருக்கிற இந்த நிமிடத்திலேயே 1 மில்லியன் டொலர் உலக இராணுவத் தேவைகளுக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்ற உண்மையை “Peaceful World” இணையதளத்துக்குப் போனால் நீங்கள் காணலாம். இந்த இணையத்தளம் ஒவ்வொரு நிமிடமும் உலகின் இராணுவத் தேவைகளுக்கு நிதி ஒதுக்கப்பட ஒதுக்கப்பட உடனுக்குடன் அதனை தரவேற்றிக் கொண்டிருக்கும் இணையத்தளம். இந்த வருடத்தில் இந்த ஆசிரிய தலையங்கம் எழுதப்படும் நேரம் வரை 1226 ட்ரில்லியன் டொலர்களை உலக இராணுவத்தேவைகள் பெற்றுள்ளன என்பதனை இந்த இணையத்தளம் அறியத்தருகிறது.

இவ்வாறு உலகெங்கும் படைத்துறைக்கான நிதி ஒதுக்கீடு என்றுமில்லாத அளவுக்கு அதிகமாக ஒதுக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய நிலையில் எல்லா நாடுகளிலும் ஆட்சியாளர்கள் தங்களின் அரசைப் பாதுகாப்பதற்கான துறையாகவே படைத்துறையைக் கருதிப் பயன்படுத்த முயல்கின்றார்களே தவிர மனிதரின் பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கு வளர்ச்சிகளுக்குப் படைத்துறை பாதுகாப்பு என்ற நிலை மாறுபட்டுள்ளது என்பதையும் இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது. இதனாலேயே இன்றைய உலகின் இந்த புதிய அரசியல் ஒழுங்குமுறை எந்த நாட்டில் இருந்தும் தமது பொருளாதாரத்திற்குத் தேவையான மூலவளங்களை மனிதவலுவை மூலதனத்தைப் பெறுவதற்கு எந்த வல்லாண்மைகளும் மேலாண்மைகளும் தமது வான்வழி ஆயதப்பலத்தைப் பயன்படுத்தல் என்கின்ற புதிய போர்முறைமையொன்றையும் உலகில் தோற்றுவித்துள்ளதை அமெரிக்க - ஈரான் போர்க்களம் உலகிற்குத் தெளிவாக்கியுள்ளது என்பதை இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

இத்தகைய அரசியல் எதார்த்தத்தில் உலகின் மூத்த குடிகளாகவும் சிறுதேசஇனமாகவும் உள்ள ஈழத்தமிழர்கள் போன்ற உலகின் தேச இனங்கள் எவ்வாறு தமது வரலாற்றுத் தாயகங்களில் தமது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக இன்று வரையுள்ள தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையை பேணலாம் என்பதே இன்றுள்ள முக்கிய கேள்வியாக உள்ளது.

இத்தகைய தேசஇனங்கள் முதலில் தமது மண்ணின் வளங்களையும் மக்களின் மனிதவலுத்தன்மைகளையும் தமது சிறுதேசஇனத்தின் உலகளாவிய சமுக மூலதனப்பலத்தையும் தெளிவாக தாம் தெளிவாக அறிய வேண்டு:ம். இதனை அறிவார்ந்த அணுகுமுறையில் பட்டியலிட்ட பட்டியலுடன் உலகநாடுகளை அணுகி தங்களுக்கான பாதுகாப்பான அமைதி வாழ்வுக்கும் வளர்ச்சிகளுக்குமான உரையாடல்களை அந்த அந்த நாட்டின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக கட்டமைப்புக்களுடன் நடத்துவதன் மூலமே தங்களது இறைமையைப் பேணலாமென்பதே இன்றுள்ள நடைமுறைச் சாத்தியமான நிலை. இதனை அனைத்துலக ஈழத்தமிழர்கள் கவனத்தில் கொண்டு ஈழத்தமிழ் அரசியல்வாதிகளை விடுத்து அனைத்துலக சட்டங்களுக்கும் தமது நாடுகளின் சட்டங்களுக்கும் அமைய உரையாடல்களை தொடங்க வேண்டிய நேரமிது என்பதை இலக்கு அழுத்திக் கூற விரும்புகிறது.

ஆயினும் இதற்கு ஈழத்தமிழர்கள் போன்ற உலகின் மூத்த குடிகள் பிரித்தானிய காலனித்துவத்தால் தங்கள் தன்னாட்சி உரிமையப் பயன்படுத்தி தமக்கான அரசியல் எதிர்காலத்தை உருவாக்க இயலாத நிலையில் பிரித்தானியாவால் தங்களின் விருப்புக்கு ஏற்பச் சுதந்திரம் வழங்கிய நிலையில் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாக அனைத்துலக நாடுகளாலும் அனைத்துலக மன்றத்தாலும் அவர்களது வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்ப அவர்கள் தங்களது அரசியல் எதிர்காலத்தை அமைக்க வேண்டிய நடைமுறை அரசியல் எதார்த்தம் தொடர்கிறது. இதனால் ஈழத்தமிழர்கள் அரசற்ற தேசஇனமாகவே தங்கள் சமகாலத்தேவைகளையும் இறைமையும் பேண வேண்டிய இக்கட்டான நிலை உள்ளது. இதனை இளைய ஈழத்தமிழர்களிடையான ஒருமைப்பாட்டாலும் அர்ப்பணிப்புடனான தேசிய தாயகப் பற்றுக்களாலும் இளைய ஈழத்தமிழர்களால் இலகுவாக எதிர்கொள்ள முடியும் என்பது இலக்கின் ஆணித்தரமான நம்பிக்கை.

இது இலகுவான விடயமல்ல. ஏனெனில் ஐக்கிய நாடுகள் சபையால் நாடுகள் என்ற அங்கீகாரத்துள் உள்ள நாடுகளின் இறைமைக்குள் ஐக்கி நாடுகள் சபையோ அல்லது வேறெந்த நாடுகளோ தலையிட முடியாது. இதனைப்பயன்படுத்தியே உலகின் சிறுதேச இனங்களை இளஅழிப்பு செய்வதைக்கூட நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் செயலென நியாயப்படுத்தி உலகின் வல்லாண்மைகளும், மேலாண்மைகளும் துணைபோகும் நிலையில் உலகில் இனஅழிப்பு தேச இறைமைக்கான தேசிய பாதுகாப்புச் செயல் என்ற அரசியல் கோட்பாடாகவே ஆட்சியாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஈழத்தமிழர்கள் முதல் பலஸ்தீனியர்கள் வரை சிறுதேச இனங்களின் இனஅழிப்புக்கு வல்லாண்மைகளும் மேலாண்மைகளுமே திட்டமிடல் முதல் ஆயுத வழங்கல் வரை செய்கின்றார்கள் என்பது உலக வரலாறாக உள்ளது.

இந்நிலையில் உலகில் ஈழத்தமிழர்கள் போன்ற அரசற்ற சிறுதேசஇனங்கள் (Nations without state) தாங்களே தங்களின் தேசநிர்மாணத்தை (Nation Building Process) முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதுவே ஈழத்தமிழரின் 22.05.1972 முதல் இன்று வரையான 54 ஆண்டுகால வாழ்வியலாக உள்ளது. இத்தகையவர்களுக்கு இன்று நாடுகளுக்கு வான்வழி ஆயுதபலமாக உள்ளது போல இணையவெளிப் பலத்தை உள்ளது. எவ்வாறு வான்வெளி ஆயுதபலத்தைப் பெருக்குதலுக்கு நிபுணத்துவ திட்டமிடலும் அனைத்துலக நாடுகளின் கூட்டாண்மை பங்காண்மையும் முக்கியமோ அவ்வாறே ஈழத்தமிழர்கள் தேசங்கடந்துறை மக்களாக உலக இனமாகப் பரிணாமம் பெற்றுள்ள நிலையில் ஈழத்தமிழர்களின் இணையஷவெளிப்பலத்தை அனைத்துலகிலும் உள்ள ஈழத்தமிழர்களிடையான கூட்டாண்மை மூலமும் பங்காண்மைமூலமும் பெருக்கிக் கல்வித் திட்டங்களால் ஈழத்தமிழர்களின் அறியாமையையும் பொருளாதாரத்திட்டங்களால் ஈழத்தமிழர்களின் வறுமையையும் நீக்குவதற்கான செயலணிகளை ஈழத்தமிழர்கள் உருவாக்க வேண்டும்.

இதனை விடுத்து ஈழத்தமிழர்கள் தங்கள் முழுமையைப் பாகம் பாகமாகப் பிரிப்பதற்கான செயற்பாடுகளையே இணைய வெளி வழி செய்து வருவதே ஈழத்தமிழரின் அறியாமையையும் வறுமையையும் நீக்க இயலாதிருப்பதற்கான தலைமைக்காரணம் என்பது ஈழத்தமிழர்களுக்கு நன்கு தெரியும். இதனை எப்படி மாற்றுவது? ஈழத்தமிழர்களின் அறிவுச் சமுகமும் பொருளாதாரச் சமுகமும் தனித்தனியாகவும் கூட்டாகவும் இணையவெளிக் கவுன்சில்களை உருவாக்குதன் மூலமே இதனை நடைமுறைப்படுத்த முடியும். அத்தகைய கவுன்சில்களின் வளர்ச்சி வழியாகவே ஈழத்தமிழர்களின் தேச நிர்மாணத்துக்கான உரையாடல்களும் அரசியலைக் கடந்த நிலையில் எல்லா நாடுகளின் மக்களுடனும் மேற்கொள்வதற்கான நிலை நடைமுறைச் சாத்தியமாகும். இளையவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்துப் பல்கலைக் கழக மட்டங்களில் தமது துறைசார் பேராசிரியர்களுடன் இணைந்து இதற்கான ஆரம்ப முயற்சிகளைச் செய்வார்களாயின் அதுவே பலமான கட்டமைப்புக்கள் உருவாக வழிபிறக்கும் என்பதையும் இத்தகைய கவுன்சில்கள் வழியாகவே உலக நாடுகளுடனான உரையாடல்கள் நடைமுறைச்சாத்தியமாகுமென்பதையும் நாம் கவனத்தில் கெண்டு அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஈழத்தமிழர் இணையக் கவுன்சில்கள் உருவாக உழைக்க வேண்டும்.

**ஆசிரியர்**




தாயகத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது வெறுமனே இலங்கைத் தீவின் உள்நாட்டு விவகாரமாகவோ அல்லது ஒரு பிராந்திய எல்லைப் பிரச்சினையாகவோ சுருங்கிவிடக்கூடியதொன்றல்ல.


அது தெற்காசியப் பிராந்தியத்தின் புவிசார் அரசியல் சமநிலை, இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு மற்றும் சர்வதேசச் சட்டக் கோட்பாடுகளோடு ஆழமாகப் பிணைக்கப்பட்ட சர்வதேச விவகாரமாகும்.




இலங்கையில் ஆட்சிமாற்றங்கள் ஏற்படும் போதெல்லாம் தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பறிப்பதும், ஏமாற்று அரசியல் சாசன நகர்வுகளை மேற்கொள்வதும் சிங்கள பௌத்த பேரினவாத அரசுகளின் தொடர்கதையாக இருந்து வருகிறது.

இத்தகையதொரு இக்கட்டான அரசியல் சூழலில், தாயகத்தமிழர் தரப்பு தமிழகத்தை எப்போதும் தனது முதன்மை அரசியல்; தார்மீகக் கோட்டையாக அணுகி வருகின்றது.

தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்த குறுகிய காலத்துக்குள் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தேறியிருந்த நிலையில் தற்போதைய முதலமைச்சர் ஜோசப் விஜயைச் சந்தித்துள்ளனர்.




தமிழக முதலமைச்சர் விஜயைச் சந்தித்த முதலாவது தாயக அரசியல் தரப்பினராக தமிழ்த் தேசியப் பேரவையினரே இருக்கையில் அவர்கள் தாயகத் தமிழர்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளை அவரிடத்தில் வலுவாக வெளிப்படுத்தியுள்ளமையானது விமர்சனங்களுக்கு அப்பால் மூலோபாய நகர்வாக உற்றுநோக்கப்படுகிறது.

அரசியல் அறிவியல் கோட்பாடுகளின்படி, ஒற்றையாட்சி அரசாங்கம் என்பது அதிகாரங்கள் அனைத்தையும் மையப் பாராளுமன்றத்தில் குவித்து வைத்திருக்கும் கட்டமைப்பாகும். அங்கு உருவாக்கப்படும் மாகாண சபைகளோ அல்லது உள்ளூர் அமைப்புகளோ இறைமை அதிகாரமுடைய துணை நிலை அமைப்புகளாக இருக்க முடியாது. அவை வெறும் மத்திய அரசின் நிர்வாகக் கிளைகளாக மட்டுமே தொழிற்பட முடியும்.

இலங்கையில் 1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டமும் மாகாணசபை முறையும், ஒரு கையால் அதிகாரங்களைக் கொடுப்பது போல் கொடுத்து மறுகையால் பறிக்கும் ஒற்றையாட்சி வஞ்சகமாக அமைந்திருந்த காரணத்தாலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கிய அனைத்துத் தரப்பினராலும் அது அடியோடு நிராகரிக்கப்பட்டது.




தற்போது இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம், கடந்த 2015-2019 காலப்பகுதியில் தயாரிக்கப்பட்ட ‘ஏக்ய ராஜ்ய’ (ஒற்றையாட்சி) வரைபை இறுதிப்படுத்தி நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. இந்த வரைபானது ஏற்கனவே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட 13ஆம் திருத்தத்தை விடவும் பலவீனமானதும், மாகாணங்களின் எஞ்சிய அதிகாரங்களையும் பறிக்கக் கூடியதுமாகும்.

இதற்கு நேர்மாறாக, சமஷ்டி என்பது மத்திய அரசும் மாநில அரசுகளும் தத்தம் எல்லைகளுக்குள் சமமான அதிகாரத்துடனும் சுயாதீனத்துடனும் இயங்குவதை உறுதி செய்வதாகும்.

அந்த அடிப்படையில், தாயகத் தமிழர்கள் கோரும் தமிழர் தேசம், வரலாற்றுத் தாயகம், இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமை ஆகிய அடிப்படைப் பண்புகளை உள்ளடக்கிய ‘திம்புக் கோட்பாடுகள்’ ஒற்றையாட்சிக்குள் சாத்தியப்படாது என்பதைத் தமிழ்த் தேசியப் பேரவை முதல்வர் விஜய்க்கு தெளிவாகக் வெளிப்படுத்தியுள்ளது.
உலக அரசியல் வரலாற்றையும் சர்வதேச தொடர்புகளையும் உற்றுநோக்கினால், ஒடுக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட தேசிய இனங்கள் தங்களின் அரசியல் விடுதலையைப் பெறுவதற்குக் ‘கையகப்படுத்தப்பட்ட தாயகம் மற்றும் தொப்புள்கொடி உறவுக் கோட்பாடு’ மிக வலிமையானதொரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காண முடியும்.

சர்வதேச அரசியலில் ‘Kin-State’ என்பது எல்லையைக் கடந்து வாழும் தங்களின் ஒத்த இனம், மொழி, கலாசாரத்தைக் கொண்ட மக்களின் பாதுகாப்பிற்கும் உரிமைக்கும் தார்மீக ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் குரல் கொடுக்கும் பொறுப்பைக் கொண்ட அண்டை மாநிலத்தையோ அல்லது நாட்டையோ குறிக்கும்.

ஐரோப்பாவில் வடக்கு அயர்லாந்துப் பிரச்சினையின் போது, அயர்லாந்து குடியரசு பிரித்தானிய அரசுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளும், சர்வதேச அரங்கில் ஆற்றிய இராஜதந்திரப் பங்கும் தமிழ்த் தேசத்தின் விவகாரத்திற்கு நெருக்கமான முன்னுதாரணமாகும்.

கிழக்குத் திமோரின் விமோசனத்தில் அவுஸ்திரேலியா மற்றும் சர்வதேச சமூகத்தின் தலையீடும், பங்களாதேஷ் உருவாக்கத்தில் இந்தியாவின் பங்களிப்பும் இக்

## விதுரன்

கோட்பாட்டின் வரலாற்றுச் சான்றுகளாகும்.

அந்த வகையில், தாயகத்தமிழர்களுக்குத் தமிழகம் என்பது வெறும் உணர்வுப்பூர்வமான நிலப்பரப்பு மட்டுமல்ல அது சர்வதேச அரங்கில் தமக்கான நீதியைப் பெறுவதற்கான ‘அரசியல் ஏவுதளம்’ என்று கூறலாம்.



கடந்த 2026 ஜனவரியில் முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய உத்தியோகபூர்வமான கடிதத்தில், இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பின் ஆபத்துக்களைச் சுட்டிக்காட்டி, 1985 திம்புக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு அமைய வேண்டும் என்று வலியுறுத்தியமை இந்த ‘Kin-State’ கோட்பாட்டின் மிகச் சிறந்த நடைமுறை வடிவமாகும்.

தமிழக அரசியல் களம் தற்போது புதிய தலைமுறை மாற்றத்தை நோக்கி நகர்ந்துள்ளது. இந்தச் சூழலில், முதல்வர் விஜயுடனான தமிழ்த் தேசியப் பேரவையின் சந்திப்பு, தமிழகத்துடனான அணுகுமுறையில் அடுத்த கட்டப் பரிமாணத்தைத் தொட்டுள்ளது.



தாயகத் தமிழர்களின் விவகாரத்தைத் தமிழகத்தின் உள்நாட்டு அரசியல் விருப்பு வெறுப்புகளுக்குக்கோ அல்லது தேர்தல் இலாப நட்டங்களுக்கோ அப்பாற்பட்ட ஒரு ‘ஒருமித்த நிலைப்பாடாக’(Consensus Policy) மாற்ற வேண்டும் என்ற பேரவையின் கோரிக்கை மூலோபாய நோக்கக் கொண்டது என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைப்புக் குழுவை உருவாக்குவது மற்றும் தாயகத்தமிழர் நலன் சார்ந்த அனைத்துக் கட்சி மாநாட்டை நடத்துவது ஆகிய நகர்வுகள், தமிழகத்தின் ஒட்டுமொத்தக் குரலாக வடிவெடுக்குமாயின் அதன் தாக்கம் அபரிமிதமானது.

அத்தகையதொரு ஒருமித்த அரசியல் அழுத்தம், புதுடில்லியில் உள்ள இந்திய மத்திய அரசுக்கு வலுவான ஜனநாயகச் செய்தியைக் கடத்துவதுடன், தயாகத்தில் கட்டமைப்பு சார் இனவழிப்பைத் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் இலங்கை அரசுக்கும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளுக்கும் ‘தாயகத்தமிழர்கள் தனித்து

தொடர்ச்சி: பக்கம் 17




ஈழத்தமிழினத்தின் சுதந்திரத்தை மீளவும் உறுதிசெய்து சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான விடுதலை அரசியல் செயல்பாடுகள் 1948, பெப்ரவரி,04, ல் பிரித்தானியர்கள் தமிழர்களுடைய உரிமையை பறித்து இலங்கை இனவாதிகளிடம் கையளிக்கப்பட்ட நாள் தொடக்கம் இன்று வரையும் 78, ஆண்டுகளாக. அறவழியில் அகிம்சை வழிப்போராட்டம், ஆயுதவழிப்போராட்டம், இராஜதந்திர வழிப்போராட்டம் எல்லாம் நடத்தப்பட்டன, நடந்துகொண்டும் உள்ளன.



இந்த செயல்பாடுகளில் வருடத்தில் உள்ள ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 12, மாதங்களும் ஈழத்தமிழர்களின் தியாகம்,சோகம்,துரோகம், வீரம், இழப்பு, சாதனை, வேதனை என்ற பட்டியல்கள் எல்லா மாதங்களிலும் உண்டு. அதில் யூலை மாதம் ஈழத்தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத பல முக்கியமான சம்பவங்கள் நடந்த மாதமாகும்.

1957 ,யூலை,26 அன்று பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தம்,அப்போதைய இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் இலங்கை வரலாற்றில் தமிழ் தலைவர் ஒருவர் சிங்களத்தலைவருடன் எழுத்து மூலமாக செய்த முதலாவது ஒப்பந்தம் யூலை மாதமாகும்.



1960, யூலை, 20, ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில்தான் இலங்கை தமிழ் அரசுக்கட்சி 16 தொகுதிகளில் 16 அதிகப்படியான பாராளுமன்ற உறுப்பினர்கள் முதல் முதலாக பெற்றது.

1975 யூலை 27 ல் விடுதலைப்புலிகளின் தலைவரால் முதன் முதலாக துரோகிகள் அழிப்பு என்ற வேட்டு யாழ் மாநகர மேயர் அல்பிரட் துரையப்பா இலக்கு வைக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்.

1977 யூலை 21 ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில்தான் 1976 மே 14 ல் தந்தை செல்வா நிறைவேற்றிய வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு ஆணை கிடைத்தது. அதில் வடகிழக்கில் 18, தொகுதிகளில் இருந்து 18, பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியதுடன் தமிழர் விடுதலை கூட்டணிக்கு எதிர்கட்சி பதவியும் கிடைத்தது. 1978 யூலை 20 ல் விடுதலைப்புலிகளின் பெயரை குறிப்பிட்டு இலங்கை பாராளுமன்றத்தில் “புலிகள் தடைச்சட்டம்” நிறைவேற்றப்பட்டது.



1979 யூலை 19 ல் பயங்கரவாத தடைச்சட்டம் அன்று மதிய போசன இடைவெளியின் பின்னர் பி.ப.01, மணிக்கு மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும், நீதி அமைச்சராகவும் இருந்த கே.டபிள்யூ தேவநாயகம் அவர்களால் அந்த சட்டம் பாராளுமன்றில் சமர்பிக்கப்பட்டு அதே இரவு 10.45, மணி வரை விவாதம் இடம்பெற்று இரவோடு இரவாக பயங்கரவாதச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.




ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களான மைத்ரிபால சேனாநாயக்க, அனுர பண்டாரநாயக்க உள்ளிட்ட அக்கட்சியின் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இச்சட்டமூலத்திற்கு தமது எதிர்ப்பை பதிவு செய்தனர்.



மதவாச்சி தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி

பா.அரியநேத்திரன்

பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சேனநாயக்கா இந்த சட்டத்தை எதிர்த்து உரையாற்றினார். இச்சட்டம் நாட்டில் ஒரு ‘இராணுவ ராஜ்யத்தை’ (Military State) உருவாக்கும் என்று கடுமையாக எச்சரித்ததுடன் “பிடிவாரண்ட்” இன்றி வீடுகளுக்குள் நுழைதல், தனிப்பட்ட ஆவணங்களைப் பறிமுதல் செய்தல், அச்சு ஊடகங்களுக்குத் தணிக்கை விதித்தல் மற்றும் காலவரையற்ற தடுத்து வைப்பு போன்ற ஜனநாயக விரோத மற்றும் ஆபத்தான விதிகள் இச்சட்டத்தில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டி தனது ஆழ்ந்த எதிர்ப்பைப்



பதிவு செய்து உடனே இந்த சட்டம் நீக்கவேண்டும் இது கொடிய சட்டம் என பேசியதுடன் எதிர்த்தும் வாக்களித்தார். அவர் அன்று கூறிய இராணுவ ராஜ்யம் இன்றுவரை தொடர்கிறது என்பதுதான் உண்மை.

ஆனால் பிரதான எதிர்கட்சியாக இருந்த தமிழர் விடுதலை கூட்டணி எதிர்கட்சி தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கம் சட்டம் தொடர்பாக எதிர்த்து பேசிவிட்டு வாக்கெடுப்பு நேரம் 18, பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த சட்டத்தை எதிர்த்து வாக்களிக்கவில்லை வாக்கெடுப்பில் பங்கேற்காமல் விலகியிருந்தனர் என்ற வரலாற்றுத்துரோகம் தமிழர் விடுதலை கூட்டணிக்கு உண்டு. தமிழர் விடுதலை கூட்டணி விட்ட முதலாவது துரோகமாக இது அப்போது விமர்சிக்கப்பட்டது.



பயங்கரவாத தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டு 48, ம் இலக்க சட்டம், இலங்கையில் தற்காலிக ஏற்பாட்டு சட்டமாக கொண்டுவரப்பட்டது. அப்போது மூன்று மாதங்களுக்கு மட்டுமே இந்த சட்டம் என கூறப்பட்டது. ஆனால் 1982 இல் கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தின் (1982 இன் 10 ஆம் இலக்க திருத்தச் சட்டம்) மூலம் முழுமையாகத் திருத்தப்பட்டு ஒரு நிரந்தர சட்டமாக மாற்றப்பட்டது. நிரந்தர சட்டமாக்கப்பட்டு இன்றுவரை அமுலில் இருக்கின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய கட்சிகள், மனிதநேய அமைப்புகள் உட்பட சர்வதேசமும் இந்த சட்டத்தை எதிர்க்கின்ற போதும் பயங்கரவாத தடைச்சட்டம் இன்னும் நீக்கப்

தொடர்ச்சி: பக்கம் 17




“ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபை” (Eelam Tamil Constituent Assembly) என்ற கட்டமைப்பு உறுப்பினர்கள், சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் கூடியபோது முக்கியமான மூன்று முடிவுகளை எடுத்துள்ளதாக அறிவித்திருந்தனர்.



சாதாரண பொதுமக்களுடன், கல்வியாளர்கள், துறை சார்ந்தவர்கள், கலந்துரையாடி எடுக்கும் முடிவுகள், அதாவது கீழ் இருந்து மேல் நோக்கி வரும் தீர்மானங்கள், ஈழத்தமிழ் அரசியல் சூழலில் மிக முக்கியமானது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி போன்ற கட்சிகள் தங்களுக்குள் இருக்கும் கட்சி அரசியல் வேறுபாடுகளைக் கடந்து சிவில் சமூகப் பிரதிநிதிகள், புலம்பெயர் அமைப்புகள் ஆகியோருடன் இணைந்து ஒரு கட்டமைப்பாக இயங்க வேண்டும் என வியாக்கியானம் செய்து களைத்துப்போன ஒரு பின்னணியில், இந்த அரசியலமைப்பு நிர்ணய பொதுச் சபை ஆரம்ப அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

சிங்களப் பெரும்பான்மை கொண்ட நாடாளுமன்ற பொறிமுறைகளுக்குள் நிரந்தர அரசியல் தீர்வு சாத்தியமற்றது என்பதால், சர்வதேச அரங்கில் தமிழர்களின் கூட்டுப் பலத்தைக் காண்பிப்பதற்கான ”பொறிமுறை” ஒன்றை கட்டமைக்க வேண்டும் என்ற வாதம் 2009 இற்குப் பின்னரான சூழலில் இருந்து இன்று வரையும் மிகக் கடுமையாக நிலவுகிறது.



ஆனால், இப் பின்புலத்தில்தான் ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச் சபை உருவானது என்று கற்பிதம் செய்ய இயலாது.

இருந்தாலும், அதன் உருவாக்கத்தின் பிரகாரம் தமிழ்த் தேசியக் கட்சிகளுடைய ‘பங்களிப்பு’ - ‘ஒத்துழைப்பு’ எவ்வாறானதாக இருக்கும் என்பதே கேள்வியாகும்.

அமெரிக்க, இந்திய அரசுகளின் இந்தோ-பசுபிக் பிராந்திய நலன்களோடு ஒத்துப் போகும் தமிழ்த் தேசிய கட்சிகள், இச்சபையின் கோட்பாடுகளுக்கு எந்தளவுக்கு உண்மையாகப் பங்களிப்பார்கள், ஒத்துழைப்பார்கள் என்ற அரசியல் வினா ஆழமான பொருள் கொண்டது.

இப் பொதுச் சபையின் மூன்று பிரதான செயற்பாட்டுக் கருவூலங்கள், அந்த அரசியல் வினாவைக் கொண்டு வருகின்றன.

**1) எவ்வாறான வரைவை முன்வைப்பது பற்றிய பொது மக்கள் கலந்துரையாடல்; அந்த உரையாடல்கள் ஊடாக வெளிவரும் கருத்துக்களை வரைபில் உள்வாங்குதல்.**

**2) அநுர அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பான தெளிவூட்டல்களை மேற்கொள்ளல்.**

**3)அநுர அரசாங்கம் உருவாக்கவுள்ள புதிய அரசியல் யாப்பின் போது தமிழ் மக்கள் சார்பில் நகலைத் தயாரிப்பதற்கு ஒரு குழுவை நியமித்தல்.**

இவைதான் அந்தப் பிரதான மூன்று கருவூலங்கள்.

அதேநேரம், இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும், இதுவரை காலம் கோரி வந்த ”சர்வதேச நீதி பொறிமுறை” என்ற நிலைப்பாட்டிலிருந்து விலகி, இலங்கை ஒற்றையாட்சி அரசின் உள்ளகப் பொறிமுறைக்கு இணங்கிவிட்டனவா என்ற மற்றொரு பலத்த கேள்வியும் சந்தேகமும் எழுகிறது.



ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச் சபையின் செயற்பாடுகள், இலங்கை உள்நாட்டுப் பொறிமுறையை ஆதரிக்கும் சர்வதேச சமூகத்திற்கு சாதகமான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறதா என்ற கேள்வி - ‘சந்தேகம்’ எழுந்தாலும் அதனையும் மறுக்க முடியாது.

ஏனெனில், சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக, இந்தோ-பசுபிக் பிராந்திய விவகாரங்களில் இலங்கை அரசின் ஒத்துழைப்பு தங்களுக்கு மிக அவசியம் என்று அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகள் கருதுகின்றன.

ஆகவே, சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்புகின்ற இலங்கை ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஓர் அரசியல் தீர்வை, ஈழத்தமிழர்கள் ஏற்க வேண்டும் என்பதே இந்த நாடுகளின் இலங்கை குறித்த வெளியுறவுக் கொள்கையாக 2009 இற்குப் பின்னர் மாறியுள்ளது.

ஆகவே, இதற்கு ஏற்ப ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச் சபையின் நகர்வுகள் அமைகிறது என்று யாரும் சந்தேகித்தால் அதில் ஒரு நியாயம் இருக்கும்.

இவ்வாறு எழும் சந்தேகங்களை, ஈழத்தமிழர் அரசியல மைப்பு நிர்ணய பொதுச் சபை போக்க வேண்டுமானால், முதலில் சமகாலப் புவிசார் அரசியல் - பொருளாதாரப் போட்டிச் சூழலை ஈழத்தமிழ் தரப்புக் கையாளக்கூடிய ஒரு வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டும்.

அந்த வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்ப தமிழ்த் தேசியக் கட்சிகளும் செயல்பட வேண்டும். அதனை

பத்திரிகையாளர்- அ.நிக்ஸன்

ஒழுங்கமைத்து நகர்த்த அரசியலமைப்பு நிபுணர்கள், கல்வியாளர்கள், துறைசார் வல்லுநர்களை உள்ளடக்கிய ஒரு ‘பொதுக் கட்டமைப்பு’ உருவாக்கப்பட வேண்டும்.

அதன் ஊடாகவே, அந்த வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் ‘சர்வதேச நீதி பொறிமுறை’ என்பதற்கான இராஜதந்திர அழுத்தங்களை உலக அரங்கில் வழங்க முடியும்..




குறிப்பாக, இலங்கைத்தீவில் வாழும் அரசியல் சமூகங்கள், நாடாளுமன்றத்துக்கு அப்பால், இணைந்த கூட்டு ஒப்பந்தம் ஒன்றின் ஊடாக தீர்வு அமைய வேண்டும் என்ற அரசியல் நியாயப்பாடுகளை சர்வதே மட்டத்தில் தெளிவுபடுத்த வேண்டும்.

ஏனெனில், கட்சி அரசியலைக் கடந்து சிங்கள அரசியல் தலைவர்கள் அனைவரும், 2012 ஆம் ஆண்டின் முதலாவது ஐ.நா தீர்மானத்தில் இருந்து இன்று வரை, போர்க்குற்றங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களில் ‘உள்ளகப் பொறிமுறை’ (Domestic Mechanism) மூலமே தீர்வு காண்போம் என்ற ஒற்றை நிலைப்பாட்டைத் தொடர்ந்து தக்கவைத்து வருகின்றனர்...இது அன்று ஜேஆர் வகுத்த உத்தி...!

அதேநேரம், நடந்தது “இனஅழிப்பு“ என தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் சில புலம்பெயர் அமைப்புகள் தொடர்ந்து கூறி வந்தாலும், இலங்கை அரசாங்கம் முன்வைக்கும் அதாவது சிங்கள அரசியல் தலைவர்களின் நிலைப்பாட்டுக்கு ஐ.நா கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கிறது.



உதாரணமாக சென்ற 19 ஆம் திகதி நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார யாழ் செம்மணி மனித புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டிருக்கிறார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கப் பிரதிநிதிகள் சிலரையும் சந்தித்துப் பேசியுள்ளார். ஆனால்,

தொடர்ச்சி: பக்கம் 18




# வார்த்தையும் வலிமையும்

பரந்து விரிந்த பிரபஞ்சத்தின் உயிரோட்டமாய் வாழும் மனிதனின் பிரதி விம்பம் பல குணவியல்புகளைக் கொண்டது. ஒழுக்க விதிகளாலும், நற்பண்புகளாலும், ஆன்மீக வழிகாட்டலாலும் நேரிய வழிமுறைகளாலும் பின்னிப் பிணையப்பட்டது. இவ்வாறு அடித்தளமிடப்பட்ட மனித வாழ்வின் மிகவும் முதன்மையான வாழ்வு குடும்ப வாழ்வு. ஒரு மனிதன் குடும்பமாகி அந்த குடும்பங்கள் சமூகமாகி அதுவே ஒரு நாட்டின் மக்கள் குழுமமாக பரிணாம வளர்ச்சியின் தோற்றுவாயாகி நிற்கிறது.



இந்த குடும்பத்தில் கணவன், மனைவி மத்தியில் வார்த்தை, செயல்கள் ஒரு குழந்தையின் நற் பழக்கத்தையும், முன்னேற்றத்தையும், சமூகத்தில் நல் அந்தஸ்த்தையும் கொண்டு வந்து நிலை நிறுத்தும். எனவே இந்த குடும்பத்தில் வளரும் குழந்தைகள் வளர்ந்து ஆசிரியராகவும், மருத்துவராகவும், சட்டத்தரணிகளாகவும், சமூகத்தை முழுமைப்படுத்தும் பெரும் பொறுப்புடையவர்களாகவும் நாட்டில் வாழ்வார்கள்.



ஒரு பாடசாலையை எடுத்துக் கொண்டால் பல குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் அங்கே கல்வி, ஒழுக்கம், கலை போன்றவற்றை கற்பதற்காக வருகிறார்கள். அந்த மாணவர்களின் வளர்ப்பு முறை என்பது அவரவர் பெற்றோரின் வளர்ப்பு முறைக்கேற்ப அவர்களுடைய பேச்சும் செயலும் அமைந்திருக்கும்.

அவ்வாறான நற்பண்புடன், நற்பழக்கத்துடன் உருவாக்க தங்களைத் தயார்ப்படுத்தும் ஆசான்கள் மட்டும் அல்லாது பெற்றோர்களும் மரியாதை கலந்த ஆரோக்கிய மான வார்த்தைகளை பேச வேண்டும். குறிப்பாக நீ என்று பேசினால் நெருக்கமான உறவு, அதிக அன்பிலான உறவு என்று பெயர் வைக்கிறார்கள்.

இதே போன்று ஆசிரியரோ பெற்றோரோ சனியன், மூதேவி, எருமைமாடு என்று வளர்ந்து வரும் பிள்ளைகளை அழைப்பது என்பது ஆரோக்கியமற்ற மரியாதை அற்ற பேச்சு முறையாகும் இதில் சில பிள்ளைகள் பாதிக்கப்படுவது மட்டு மில்லாது மரியாதை அல்லது ஆரோக்கியமற்ற வளர்ப்பு முறைக்கு செல்லும் அபாய நிலையை அடைகிறார்கள்.



ஆரோக்கியமான பேச்சுப்பழக்கம் உள்ள ஒரு குடும்பத்தில் வளரும் பிள்ளைகளாக இருந்தால் அந்த பிள்ளை ஆரோக் கியமற்று தனக்கு கற்பிக்கும் ஆசான் பேசும் போதோ அழைக்கும் போதோ தன்னை பிடிக்காமல் ஆசிரியர் இவ்வாறு கரடு முரடாக பேசுகிறார் அல்லது அவர்களுக்கு அந்த வார்த்தை, அவர்பேசும் தோரணை புதிதாக இருக்கும் போது பிள்ளைகள் அவர்களுடைய ஆரோக்கியமான செயல்களிலிருந்து அச்சப்பட்டு பின்ன டைவை சந்திக்கும் நிலை காணப்படும்



தங்களை ஆசிரியர்கள் ஒதுக்கி வைக்கிறார் என்று எண்ணுவதற்கு வாய்ப்பு உள்ளது. அதுவும் இன்றைய குழந்தைகள் அவ்வாறான நிலைப்பாட்டை உடைய வர்களாகவே மாறும் நிலை அதிகமாக காணப்படுவது உண்மையான ஆய்வாக உள்ளது. அதற்கு இன்றைய சட்டமும் பிரதான காரணமாகி விடுகிறது.

ஒரு குழந்தை அதிகநேரம் தனது நேரத்தை செலவிடுவது பாடசாலை ஆசிரியர்களுடனும், வீட்டில் பெற் றோருடனும் தான். இவர்களுடன் பேசும் போது பழகும் போது அன்புகலந்த ஆரோக்கியமான வார்த்தைகளை பேசும் போது அந்த குழந்தை மரியாதையான, அன்பான குழந்தை

ஈழத்தில் இருந்து **மதுரமோழி**

யாக வளர்வார்கள். 2009ற்கு பின்னர் எமது மக்கள் வாழும் பகுதிகளில் இது மோசமான நிலையை எட்டி விட்டது. 2009 களுக்கு முன் குழந்தைகளை ஆரோக்கியமான நிலையில் வளர்ப்பதற்காக சிறுவர் பூங்காக்கள், செஞ்சோலை, தளிர் போன்று பல ஈழத்தின் பல பாகங்களிலும் கிளை பரப்பப் பட்டிருந்தது. அங்கு காலை 6. 30 மணிக்கு பெற்றோரால் கொண்டு வந்து விடப்படும் குழந்தைகள் மாலை 5. 30 மணிக்கு வீட்டிற்கு கூட்டி வரப்படுவார்கள்.



அங்கு சத்தான உணவு, ஒழுக்கம், கல்வி, கலை, நற்பழக்கங்கள் என பிள்ளைகள் பூரண ஆரோக்கியத்துடன் வளர்க்கப்பட்டார்கள். இங்கு பெற்றோரின் பொருளாதார சுமை குறைக்கப்பட்டு இருவரும் வேலை செய்யும் நிலையும் உருவாகி இருந்தது. பிள்ளைகளும் நல்லது கெட்டதென நாளும் அறிந்து கொள்ளும் நிலை உருவாகியது. அங்கு ஆரோக்கியமற்ற வார்த்தைகளோ பேச்சுகளோ இருந்த தில்லை. எனவே சமூக அந்தஸ்துடன் பயணிக்கும் இன் றைய சமூகப் பொறுப்புள்ள பெற்றோர்களாக, ஆசிரியர்க ளாக மாறி வலிமையான வார்த்தைகளை உணர்ந்துவளரும் குழந்தைகளை வளமாக்கி நல் எதிர் காலத்தை உருவாக்கு வோம்.




தீபச்செல்வன்

ஈழத் தமிழரின் நிலம் என்பது வெறுமனே ஒரு புவியியல் பரப்பு இல்லை. இங்கு நிலம் என்பது உயிரும் சாட்சியுமானது. ஒரு புறம் சிங்களக் குடியேற்றத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக எங்கள் நிலம் போராடுகிறது. இன்னொரு புறம், அதே நிலத்தின் அடியிலிருந்து இனவழிப்பின் புதைக்கப்பட்ட சாட்சிகளாக எலும்புக்கூடுகள் எழுந்து நீதியைக் கேட்டுப் போராடுகின்றன. உண்மையில், செம்மணி என்பது மண்ணின் கீழ் புதைக்கப்பட்ட இனப்படுகொலைகள் குறித்த உண்மைகள் மீண்டும் நீதிக்காக மூச்சுவிடத் துவங்கிய இடம். பல ஆண்டுகளாக ஈழத் தமிழ் தாய்மார்கள் தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் புகைப்படங்களை மார்போடு அணைத்தபடி இலங்கை அரசை நோக்கியும், கண்ணீரால் நனைந்த முகங்களுடன் உலகை நோக்கியும் நீதியைக் கோரி நின்றனர். இன்று ஈழ மண்ணில் அவர்களின் குரலோடு இணைந்து, சித்திரவதையின் காயங்களைத் தாங்கிய எலும்புக்கூடுகளும் நீதிக்காகப் பேசத் துவங்கியுள்ளன.



## நினைவாக மாறிய நிலம்

உண்மையில் வடக்கு கிழக்கின் மண் வெறும் நிலமல்ல. அது புதைக்கப்பட்ட வரலாறுகளின் களஞ்சியமாகவும் மறைக்கப்பட்ட உண்மைகளின் கல்லறையாகவும் இருக்கிறது. பதிலின்றி காத்திருக்கும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களின் மௌனக் குரல்கள் துடித்தசைக்கின்ற தாய்நிலம். அவற்றில் மிகவும் கனத்தவொரு நினைவாக நிற்கிறது செம்மணி. யாழ்ப்பாணத்தின் புறநகரில் அமைந்துள்ள இந்த மண், பல தசாப்தங்களாக காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் நினைவிடமாகவும், தமிழினத்தின் மீது நிகழ்த்தப்பட்ட அரசின் இனவழிப்பு வன்முறையின் அடையாளமாகவும் சாட்சியாகவும் இருக்கிறது. அங்கு புதைக்கப்பட்டிருப்பது வெறுமனே மனித உடல்கள் மாத்திமல்ல. எண்ணற்ற குடும்பங்களின் எதிர்காலமும், குழந்தைகளின் கனவுகளும், தாய்மார்களின் வாழ்நாளும்தான்.



1990களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் மீண்டும் இலங்கை இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டபோது, ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கடத்தப்பட்டனர். காணாமல் ஆக்கப்பட்டனர். இளைஞர்கள் விசாரணை என்ற பெயரில் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஆனால் அந்தப் பயணம் பெரும்பாலும் ஒருவழிப் பயணமாகவே இருந்தது. தாய்மார்கள் முகாம்களின் வாசல்களில் காத்திருந்தனர். மனைவிகள் கணவர்களின் பெயர்களை அதிகாரிகளிடம் மீண்டும் மீண்டும் கூறினர். குழந்தைகள் ஒவ்வொரு மாலையும் கதவு திறக்கும் ஓசையைக் கேட்டபோது, “அப்பா வந்திட்டாரோ?” என்ற நம்பிக்கையோடு ஓடினர். யாரும் திரும்பவும் இல்லை. பதில்கள் கேட்கவும் இல்லை.



## கிருஷாந்தி வழக்கு

அக்காலத்தில் செம்மணி இராணுவ முகாம் என்ற பெயரே தமிழர்களுக்கு அச்சத்தின் மற்றொரு பெயராகத்தான் இருந்தது. அங்கு அழைத்துச் செல்லப்பட்ட பலர் மீண்டும் உயிருடன் திரும்பவில்லை என்ற சாட்சிகள் தொடர்ந்து வெளிவந்தன. உண்மையை நிரூபிக்கும் ஆதாரங்கள் அனைத்தும் மண்ணுக்குள் புதைக்கப்பட்டிருந்தன. 1998ஆம் ஆண்டு, மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணையின்போது, குற்றவாளிகளுள் ஒருவரான இராணுவ உறுப்பினர் சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றத்தில் அதிர்ச்சிகரமான வாக்குமூலமொன்றை வழங்கினார். யாழ்ப்பாணத்தின் செம்மணியில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.



அந்த ஒரே வாக்குமூலம்தான் செம்மணி மண்ணைச் சாட்சிக் கூண்டுக்குள் அழைத்துவந்தது. பின்னர் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் உண்மையை முழுமையாக வெளிக்கொணர வேண்டிய அந்த முயற்சிகள் அரசியல் தலையீடுகளாலும், நீதியைத் தவிர்க்கும் திட்டமிட்ட செயல்களாலும் பாதியில் நிறுத்தப்பட்டன. சில எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன; ஆனால் அவற்றின் பின்னால் இருந்த ஆயிரக்கணக்கான உயிர்களின் கதைகள் புதைக்கப்பட்டபடியே விடப்பட்டன. செம்மணி வழக்கில் மண்ணுக்குள் புதைக்கப்பட்டவர்களைப் போலவே உண்மையும் மீண்டும் புதைக்கப்பட்டது. இப்போது, இருபத்தெட்டு ஆண்டு களுக்குப் பின்னர், மீண்டும் செம்மணி அகழப்படுகிறது. ஆனால் காலம் நகர்ந்தாலும், ஆட்சிகள் மாறினாலும், மண்ணின் கீழே புதைக்கப்பட்டிருந்த எம் சனங்களின் குரல்கள் தீரவில்லை. யார் கொன்றார்கள்? ஏன் கொன்றார்கள்? எத்தனை பேர் புதைக்கப்பட்டனர்? ஒட்டுமொத்த தமிழினமும் இன்று செம்மணியின் நீதிக்காக, செம்மணியில் கொன்றழிக்கப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் விபரங்களுக்காக்க் காத்திருக்கிறது.



## இலங்கையின் மிகப் பெரிய மனிதப் புதைகுழி

இலங்கையின் போருக்குப் பிந்தைய வரலாற்றை எழுத வேண்டுமாயின், அது கூட்டுப் புதைகுழிகளின் வரலாறாகவும் எழுதப்பட வேண்டும். மன்னார் சாத்திக்குளம், கொக்குத்தொடுவாய், எனப் பல இடங்களில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், இப்போது மீட்புப் பணியில் 400 எலும்புக் கூட்டு எச்சங்களை கடந்துள்ள நிலையில், செம்மணி இலங்கையின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக அடையாளம் பெற்றுள்ளது. ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளும் தமிழர் நிலத்தில் நிகழ்த்திய சாதனைதான் இது.



உண்மையில் ஒவ்வொரு எலும்புக்கூடுகளின் முகங்களையும் பார்க்கையில், ஒவ்வொன்றும் ஒரு குடும்பத்தின் காத்திருப்பைச் சொல்கிறது. ஒவ்வொரு மண்டையோடும் நிறைவேறாத ஒரு கனவின் துயரத்தை நம்மிடம் பேசுகிறது. ஒவ்வொரு உடைந்த எலும்பும் சித்திரவதையின் வாதையைக் கூறுகிறது. மண்ணின் கீழிருந்து எழும் இந்த வாக்குமூலங்கள் நீதிமன்றங்களில் கேட்கப்படுவதில்லையே? மனித மனச்சாட்சிக்குள்தான் இவைகள் ஒலிக்கின்றன.

## எலும்புக்கூடுகளின் சாட்சியம்

செம்மணியில் இருந்து எழும் ஒவ்வொரு எலும்புக்கூடும் இலங்கையின் நீதித்துறையை நோக்கிக் கேள்வியை எழுப்புகிறது. அதே நேரத்தில் சர்வதேச சமூகத்தையும் அது நேராக நோக்கிக் குரல் எழுப்புகிறது. ஒரு தீவில் இவ்வளவு பெரிய மனிதப் புதைகுழி இருக்கும்போது, உலகம்

தொடர்ச்சி: பக்கம் 11




மட்டு.நகரான்

வடகிழக்கு மாகாணத்தில் கடந்த ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு ஆக்கிரமிப்புகள் இந்த ஆட்சிக்காலத்தில் முன்னெடுக்கப்படாது என்ற நம்பிக்கை யில் தேசிய மக்கள் சக்திக்கு தமிழர்கள் ஆதரவு வழங்கியிருந்தனர். அத்தனை நம்பிக்கையினையும் சிதைக்கும் வகையில் இன்று மீண்டும் காணி அபகரிப்புகள் முன்னெடுப்புகள் பலமாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.



கிழக்கு மாகாணத்தில் பேசுபொருளாக இருந்த மட்டக்களப்பின் மயிலத்தமடு,மாதவனை கால்நடை பண்ணையாளர்களின் காணிகளை அபகரிக்கும் முயற்சிக்கு எதிராக கடுமையான போராட்டங்கள் முன்னெடுத்துவந்த நிலையிலும் நீதிமன்ற முன்னெடுப்புகள் காரணமாகவும் தற்காலிமாக தடைப்பட்டிருந்த அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களின் செயற்பாடுகள் மீண்டும் பரவலாக இடம்பெற்றுவருவதுடன் அப்பகுதியில் உள்ள பண்ணையாளர்களும் அச்சுறுத்தப்பட்டுவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசங்களான பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களை ஒட்டியுள்ள மயிலத்தமடு, மாதவனை ஆகிய பகுதிகள் தமிழ் கால்நடை பண்ணையாளர்களின் பாரம்பரிய மேய்ச்சல் நிலங்களாகும். கடந்த ஒரு மாத காலமாக இப்பகுதிகளில் சட்டத்திற்குப் புறம்பான முறையில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள குடியேற்றவாசிகள் அத்துமீறி நுழைந்து, காடுகளை அழித்து, தற்காலிக குடில்களை அமைத்து வருகின்றனர். இந்த அத்துமீறிய ஆக்கிரமிப்பானது அப்பகுதியில் நீண்டகாலமாக பண்ணையாளர்கள் எதிர்கொண்டுவரும் வாழ்வாதாரப் பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மத்தியான வேளையில், பண்ணையாளர்களின் தற்காலிக இருப்பிடங்களுக்கு கத்திகள் உள்ளிட்ட கூர்மையான ஆயுதங்களுடன் சென்ற சில சிங்களக் குடியேற்றவாசிகள், அவர்களை அந்த இடத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு கடுமையான அச்சுறுத்தல்களை விடுத்துள்ளனர். இந்தத் திடீர் வன்முறைச் சம்பவம் பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் பீதியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தங்களின் சொந்த மேய்ச்சல் நிலங்களில் தங்கியிருந்து கால்நடைகளைப் பராமரிக்க முடியாத அளவுக்கு அவர்களின் பாதுகாப்பு தற்போது கேள்விக்குறியாகியுள்ளது.



இப்பகுதியில் நிலவும் பதற்றத்தைத் தணிப்பதற்கும், பண்ணையாளர்கள் மற்றும் அவர்களின் கால்நடைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கும் எனக் கூறி ஒரு பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டுள்ளது. கரடியனாறு பொலிஸ் நிலையத்திற்கு கீழ் இந்த சோதனைச்சாவடி செயற்பட்டுவருகின்றது. எனினும், இந்தச் சோதனைச் சாவடியைக் கடந்து செல்லும் பண்ணையாளர்கள் ஒவ்வொருவரும் கடுமையான தனி நபர் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படும் அதே வேளை, அத்துமீறி இப்பிரதேசத்திற்குள் நுழையும் சிங்கள பயிர்ச்செய்கையாளர்கள் மீது எந்தவிதமான தடையோ அல்லது சட்ட நடவடிக்கைகளோ எடுக்கப்படுவதில்லை என பண்ணையாளர்கள் தரப்பில் குற்றம் சுமத்தப்படுகிறது. அதுமட்டுமன்றி இது தொடர்பில் குறித்த சோதனைச்சாவடிக்கு சென்று முறையிட்டால் கரடியனாறு பொலிஸ் நிலையத்துக்கு செல்லுமாறு கூறப்படுகின்றது,கரடியனாறு பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறையிட்டால் முறைப்பாடுகள் எடுக்கப்படுவதில்லையெனவும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

இதேபோன்று பண்ணையாளர்களின் இருப்பிடங்களுக்குச் செல்லும் பொலிஸார், அத்துமீறிய குடியேற்ற வாசிகளை வெளியேற்றுவதற்குப் பதிலாக, பண்ணையாளர்களையே அவ்விடத்தை விட்டு வெளியேறுமாறு அழுத்தம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கும் பண்ணையாளர்கள் தமக்காக அமைக்கப்பட்ட பொலிஸ் சாவடியானது இன்று முற்றுமுழுதாக சட்ட விரோத பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஆதரவாக செயற்படுவதாக வும் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாரின், இராணுவத்தினரின் தீவிர கண்காணிப்புக்கு மத்தியிலேயே வெளிமாவட்டங்களைச் சேர்ந்த குடியேற்றவாசிகள் மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதிகளில் உள்ள அடர்ந்த காடுகளை அழித்து வருகின்றனர். புல் தரைகள் மற்றும் புதர்க்காடுகளைத் தீயிட்டு அழிப்பதன் மூலம், அப்பகுதியின் ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் சமநிலையும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இயற்கை வளங்களை நாசமாக்கி, காடுகளைத் துப்புரவு செய்து,அங்கு சட்டவிரோத குடில்களை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.இதன்காரணமாக கால்நடைகள் உணவுகளைப்பெற்றுக்கொள்வதில் பெரும் கஸ்டங்களை எதிர்நோக்கிவருவதாகவும் அப்பகுதியில் உள்ள பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் நில ஆக்கிரமிப்பும் சுற்றுச்சூழல் நாசகார வேலைகளும் பகிரங்கமாக நடைபெற்று வரும் வேளையில், பொறுப்புவாய்ந்த அரச திணைக்களங்களான மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்ற பல்துறை சார்ந்த அதிகாரிகள் ஏன் மௌனம் காக்கிறார்கள் என்ற பலத்த கேள்வி எழுந்துள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராக உடனடியாக சட்டங்களை அமுல்படுத்தி, வழக்குகளைத் தொடரும் இந்தத் திணைக்களங்கள், பேரினவாத சிந்தனையுடன் திட்டமிட்டு நடத்தப்படும் இந்தச் சட்டவிரோத ஆக்கிரமிப்புகளைத் தடுக்கத் தவறுவது ஏன் என்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



பண்ணையாளர்கள் ஒரு குச்சிவெட்டினாலும்,பண்ணையாளர்கள் தங்களது இருப்பிடங்களை கத்திகளை வைத்திருந்தாலும் கைதுசெய்து வழக்கு தொடரும் வனஇலாகாவினர் இப்பகுதியில் அத்துமீறிய விவசாயிகள் முன்னெடுக்கும் செயற்பாடுகளை கண்டும் காணாதுபோல் செயற்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகி;றது.

2020ஆம் ஆண்டு பாரியளவில் இப்பகுதியில் அத்துமீறிய விவசாய நடவடிக்கைகள் வேறு மாவட்டங்களை சேர்ந்த சிங்களவர்கள் முன்னெடுத்தபோது இப்பகுதிக்கு விஜயம் செய்த மட்டு.ஊடக அமையத்தினை சேர்ந்த ஊடக வியலாளர்கள் இது தொடர்பான முழுமையான விபரங்களையும் இதன் பின்னணி குறித்தும் வெளிப்படுத்தியிருந்தனர்.


தொடர்ச்சி: பக்கம் 10




## பா.அரியநேத்திரன்

எனக்கொரு கேள்வி.!

இந்த இசைநிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் யார்.? ஈழத்தமிழர்கள்தானே, அவர்களுக்கு இப்படியான முக்கிய தினங்களில் அப்படியான களியாட்ட நிகழ்வுகளை நடத்தாமல் வேறொரு தினத்தை தெரிவு செய்திருக்கலாம் அல்லவா.? அப்படியாயின் ஏன் இவ்வாறான நாட்களை அவ மதிப்பு செய்து திசை திருப்பவேண்டும்.



தென்னிந்திய சினிமாக்கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், நடனக்கலைஞர்கள், விவாதக்கலைஞர்கள், நாடகக்கலைஞர்கள் அவர்கள் தமது தொழில் நிமித்தம் யார் பணத்தை கொடுத்து அழைத்தாலும் எந்த நாட்டுக்கும் செல்வார்கள் அவர்களுக்கு ஈழத்தமிழர்களின் தமிழ்தேசிய ஈகை நாட்கள் எது ?முக்கிய நாட்கள் எது என்பது ஒரு சிலரை தவிர எல்லோருக்கும் தெரியாது.

ஆனால் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்தேசிய செயல்பாடுகளை முன்னெடுக்கும் ஈழத்தமிழர்களுக்கு சகல முக்கிய தினங்களும் தெரியும். இவ்வாறான நாட்கள் தவிர்க் கப்பட வேண்டும் என்பது தெரியாமல் இல்லை..

அதை தெரிந்துகொண்டும் செய்கிறார்கள் எனில் அவர்களை யாரோ இயக்கிறார்கள் என்ற சந்தேகம் உண்டு. பிரான்ஸ் நாட்டில் 80,000 தொடக்கம் 100000 தமிழர்கள் வசிப்பதாக மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

பிரான்ஸ் நாட்டில் பல ஈழத்தமிழ் அமைப்புகள் உள்ளன. அதில் சில முக்கிய அமைப்புகள் இவை இந்த அமைப்புகள் இப்படியான நிகழ்வு குறித்து எதிர்க்கிறார்களா? ஆதரிக்கிறார்களா?




எதிர்ப்பதானால் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த ஈழத்தமிழர்களுடன் அணுகி பேசி ஏன் தடுக்கமுடியாது.? அவர்களும் மானம் உள்ள தமிழர்கள்தானே மரக்கட்டைகள் இல்லையே..


**1. பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு ஈழத்தமிழர் களின் தேசிய மற்றும் கலாச்சார நிகழ்வுகளை முன் னெடுக்கும் முதன்மை அமைப்பாகும்.**

**02. பிரான்சு தமிழர் கூட்டமைப்பு அரசியல் மற்றும் நினைவு கூர்தல் நிகழ்வுகளை ஒருங்கிணைத்துச் செயல்படுகிறது.**

**03.பிரான்ஸ் ஈழத்தமிழர் அவை .**



**04.தமிழ் மரபு வலையமைப்பு அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.**
**05.தமிழ்ச் சோலைத் தலைமைப் பணியகம் பாரிஸ்- தமிழ்ப் பாடசாலைகளை வெற்றிகரமாக நடத்தி வருகிறது.**



**06.தமிழ் இளையோர் அமைப்பு - பிரான்ஸ் இனப் படுகொலை கண்காட்சிகள், மனித உரிமை விழிப்புணர்வு மற்றும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கிறது.**
**07,தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காகச் செயற்படுகிறது.**
**08.பிரான்சு தமிழ்ச் சங்கம் மற்றும் பிரான்ஸ் தமிழர் தகவல் மையம் போன்றவை சமூக வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்புச் சேவைகளை வழங்குகின்றன.**

1. பிரான்சு தமிழர் வர்த்தக சங்கம்: பிரான்சில் உள்ள தமிழ் தொழில்முனைவோர்களை ஒருங்கிணைத்து, சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காகச் செயல்படுகிறது.

2. தமிழ் ஆர்வலர்களின் அமைப்பு தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்காகவும் குரல் கொடுக்கும் அமைப்பு.

இந்த 10, அமைப்பு மட்டுமல்ல இன்னும் பல அமைப்புகள் உண்டு.

இது யாரையும் புண்படுத்தும் பதிவல்ல எனது மனதில் எழுந்த சந்தேகம் மட்டுமே..

• • •

## அநுர ஆட்சியிலும் ... தொடர்ச்சி...

மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதிகள் தசாப்த காலமாக பல்லாயிரக்கணக்கான கால்நடைகளுக்கான திறந்தவெளி மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கொண்டு வரப்படும் மாடுகள் இப்பகுதியிலேயே பராமரிக்கப்படுகின்றன. மாவட்டத்தின் பால் உற்பத்தியிலும், உள்ளூர் பொருளாதாரத்திலும் இப்பண்ணையாளர்கள் மிக முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். இயற்கை வளங்களைச் சார்ந்து வாழும் இவர்களின் முழுமையான பொருளாதாரமே இந்தக் கால் நடைகளை நம்பியே கட்டமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இப்பகுதிக்கு ஜனாதிபதி சட்டத் தரணிசுமந்திரன்,அன்றையபாராளுமன்றஉறுப்பினர்களான சாணக்கியன்,கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் விஜயம் செய்து நேரடியாக ஆய்வுகளை முன்னெடுத்ததுடன் 2023ஆம் ஆண்டு இதற்காக கொழும்பு உச்சநீதிமன்றில் வழக்கு ஒன்றும் தாக்கல்செய்யப்பட்டது.இந்த வழக்கின் அடிப்படையில் குறித்த பகுதிகளில் உள்ள அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்கள் என்பதை மகாவலி அபிவிருத்தி திணைக்களம் உறுதிப்படுத்தியதுடன் அவர்களை அங்கிருந்து வெளியேற்றவும் உறுதியளித்திருந்ததன் அடிப்படையில் அவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

எனினும் அதன் பின்னர் அப்பகுதியில் ஓரளவு வெளியாரின் தலையீடுகள் இன்றி பண்ணையாளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்திருந்த நிலையிலேயே மீண்டும் அப்பகுதியில் அத்துமீறிய பண்ணையாளர்களின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை(02ஆம் திகதி) கரடியனாற் றுப் பகுதிக்குரிய வனப் பரிபாலனத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் இப்பகுதிக்குக் களப்பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்போது, சட்ட விரோத அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த ஆக்கிரமிப்பாளர்களால் அரச அதிகாரிகள் மிக மோசமான முறையில் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இந்த அச்சுறுத்தலுக்குப் பணிந்த அதிகாரிகள், பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களிடம் “எங்களால் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது” எனக் கூறிவிட்டுத் திரும்பியுள்ளனர். சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய அதிகாரிகளே ஆக்கிர மிப்பாளர்களுக்கு அஞ்சிப் பின்வாங்குவது, இப்பகுதியில் சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறியாகியுள்ளதை நிரூபிக்கிறது.

கடந்த மே மாதம் (மே) 20ஆம் திகதி நாட்டின் ஜனாதிபதி மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்தபோது, தமது நீண்டகாலப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான மற்றும் மகிழ்ச்சியான தீர்வு கிடைக்கும் என்று பண்ணையாளர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலும் மயிலத்தமடு,மாதவனை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வகையில் காணி ஒதுக்கீடு உட்பட பல்வேறு தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டபோதிலும் அது எதுவும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த அத்துமீறிய பயிர்ச் செய்கையாளர்களின் செயற்பாடுகளுக்கு பின்புல மாக இருந்துவரும் அம்பிட்டியசுமனரத்ன தேரரை ஜனாதிபதி கூட்டம் நிறைவுபெற்றதும் சந்தித்துச்சென்றதை பலர் சந்தேக கண்கொண்டு பார்த்தனர்.இன்று அந்த சந்தேகம் உண்மையாகியுள்ளோதோ என்று தோன்றுமளவுக்கு இன்று செயற்பாடுகள் மயிலத்தமடு,மாதவனை பகுதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதால் மாடுகளுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற் பட்டுள்ளது. தவறி விவசாய நிலங்களுக்குள் நுழையும் மாடுகள் சுடப்பட்டும், விஷம் வைக்கப்பட்டும் கொடூரமாகக் கொல்லப்படும் நிலைமைகளும் ஏற்படுவதற்கான சூழ்நிலை காணப்படுகின்றன.இவ்வாறான நிலைமைகள் கடந்தகாலத்தில் இருந்தன.

மயிலத்தமடு மற்றும் மாதவனைப் பகுதி பண் ணையாளர்களின் போராட்டம் என்பது வெறும் காணிப் பிரச்சினை அல்ல. அது அவர்களின் உயிர்வாழும் உரி மைக்கான போராட்டம். எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு, சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றி, மட்டக் களப்பு மாவட்ட பண்ணையாளர்களின் பாரம்பரிய மேய்ச்சல் நிலத்தை அவர்களிடம் முறைப்படி ஒப்படைக்க வேண்டும். தவறின், இது ஒரு மாவட்டத்தின் பொருளாதார அழிவோடு மட்டுமல்லாமல், தேவையற்ற சமூகக் கலவரங்களுக்கும் வழிவகுத்துவிடும்.இதனை சிந்தித்து செயற்படுவது அவசியமாகும்.

• • •

## காசா மக்களை... தொடர்ச்சி...

இந்தக் குவிப்பு வெளிப்படையாகத் தெரிகிறது: அமைதி வாரியம் ஜூன் 30 அன்று ஒரு தளவாடத் தளத்திற்கு தந்திரோபாய வாகனங்கள் வந்தடையும் படங்களை வெளியிட்டது, மேலும், உதவி என்பது பரி சோதனையின் அடிப்படையில் நிபந்தனைக்குட்பட்ட, கண்காணிக்கப்படும், சோதனைச் சாவடிகளால் கட்டுப் படுத்தப்படும் ஒரு சமூகத்தை விவரிக்கும் கசிந்த ஆவ ணங்களுடன் இந்தத் திட்டம் பொருந்துவதாக டிராப் சைட் கூறுகிறது.




ஈழத் தமிழர் அரசியல் என்பது நீண்டகாலமாக அடையாள அரசியல் (identity politics) அதிகாரப் பகிர்வு (power-sharing) மற்றும் தேசிய சுயநிர்ணயக் கோரிக்கைகள் (self-determination claims) ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு சிக்கலான அரசியல் அமைப்பாக இருந்து வருகிறது. 2009 ஆம் ஆண்டு ஈழத் தமிழர்களினுடைய ஆயுதப் போராட்டமானது நந்திக்கடலில் மௌனிக்கப்பட்ட பின்னர், இந்த அரசியல் இயக்கம் முழுமையாக தேர்தல் அரசியல் மற்றும் தூதரகப் (diplomatic) தளங்களுக்கு மாறியுள்ளது.



கடந்த பதினைந்து ஆண்டுகளில், ஈழத் தமிழர் அரசியல் ஒரு ஒருங்கிணைந்த அரசியல் சக்தியாக (unified political force) உருவாகாமல், பல்வேறு கட்சிகள், தலைமை மையங்கள் மற்றும் போட்டி நிலைப்பாடுகளாகப் பிளவடைந்துள்ளது. இந்த பிளவுகள் தமிழர் அரசியலின் கூட்டுப் பேரம் பேசும் திறனை (collective bargaining power) குறைத்து கொண்டு வருகின்றது.



சில விமர்சனக் கோணங்களில், சிங்கள அரசின் நீண்டகால அரசியல் வியூகமானது (political strategy) இந்த பிளவுகளுக்கு மறைமுகமாக பங்களித்து கொண்டிருக்கின்றமையினையும் ஆராயலாம். குறிப்பாக, ஈழத் தமிழர் அரசியல் தரப்புகளை ஒரே பேச்சுவார்த்தை மேசையில் ஒருங்கிணைய விடாமல், பல்வேறு அரசியல் தரப்புக்களாக தனித்தனியாக அணுகுமுறை (engage) செய்வது, மற்றும் அரசியல் நிலைப்பாடுகளை சிதறடிப்பது (segment) போன்ற அணுகுமுறைகள் நீண்டகால ரீதியாக வெற்றியளித்துக்கொண்டிருக்கின்ற அரசியல்ரீதியான உத்தியாகும். இவை ஒரு வகையான பிரித்தாளும் உத்தி (divide-and-manage strategy) என வரையறுக்கலாம். இதன் மூலம் அதிகார சமநிலையை (power equilibrium) அரசியல் ரீதியாக இலங்கை அரசு தக்கவைத்துக்கொண்டு வெளிப்புறமிருந்து வருகின்ற அழுத்தங்களை குறைத்துக் கொண்டு வருகின்றது.



எனினும், இந்த விளக்கம் ஒரே பரிமாணத்தில் மட்டுமே பார்க்கப்பட முடியாது. தமிழர் அரசியலின் உள்நாட்டு இயக்கவியல் (internal political dynamics) கூட முக்கிய பங்காற்றுகிறது. தலைமைத்துவ போட்டிகள், கொள்கை வேறுபாடுகள் (ideological divergences), தேர்தல் அடிப்படையிலான போட்டி அரசியல் (electoral competition), மற்றும் தலைமுறை மாற்றம் (generational transition) ஆகியவை கட்டமைப்புரீதியான காரணங்களாக (structural factors) செயல்பட்டு, ஒருங்கிணைந்த அரசியல் நிலையை உருவாக்குவதில் தடையாக உள்ளன.



இந்த நிலைமை, ஈழத்தமிழர்களினை பொறுத்த மட்டில் போருக்கு பிந்திய அரசியல் ரீதியான கட்டமைப்பில் (post-conflict political architecture) ஒரு சமநிலையற்ற தன்மையினை உருவாக்கியுள்ளது. ஈழத்தமிழர் தரப்பில் ஒரே அரசியல்தன்மை (narrative) இல்லாததால், அரசியல் கோரிக்கைகள் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் நுண்கூறுகளாக சிதைக்கப்பட்டு (fragmented) கொண்டு வருகின்றது.. இதன் விளைவாக, ஈழத்தமிழர்களினுடைய அரசியல் பேரம்பேசும் திறனை (negotiation capacity) விடுதலைப்புலிகளினுடைய காலத்தினுடன் ஒப்பிடும் பொழுது குறைத்துள்ளது.

இன்றைய சூழலில், ஈழத்தமிழர் அரசியல் ரீதியில் எதிர்கொள்ளும் முக்கிய சவால் வெளிப்புற அழுத்தங்கள் மட்டுமல்ல மாறாக உள்ளக ரீதியான சிதைவுகள் (fragmentation) மற்றும் மூலோபாய முரண்பாடுகளும் (strategic incoherence) காரணம் ஆகும்.

முடிவாக, ஈழத் தமிழர் அரசியலின் எதிர்காலம் அதன் அரசியல் ரீதியான ஒருங்கிணைப்புதிறனை (political consolidation capacity) பொறுத்தே தீர்மானிக்கப்படும். பிளவுகள் ஜனநாயக அரசியலின் இயல்பான அம்சமாக இருந்தாலும், குறைந்தபட்ச மூலோபாய ரீதியான ஒற்றுமை (strategic unity) மற்றும் கொள்கை அளவிலான ஒருமைப்பாடு (policy coherence) இல்லாமல் எந்த அரசியல் இயக்கமும் நீண்டகால அரசியல் வெற்றியை அடைய முடியாது என்பது ஈழத்தமிழர்களாகிய எமக்கும் விதிவிலக்கானதல்ல என்பது புலனாகும்.

யு.ஆ.டு லம்பேட்

• • •

## செம்மணி: நீதிக்காகவே... தொடர்ச்சி...

இன்னும் அமைதியாக இருக்க முடியுமா? அண்மையில் இலங்கையின் நீதியமைச்சர் செம்மணிக்குச் சென்று அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டார். ஆனால் தமிழர்கள் கேட்பது ஒரு 'விசிட்டை'யல்ல. எமக்கு நீதியே தேவை. ஈழத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளில் பலர் நீதியைக் காணாமலேயே உயிர் நீத்துவிட்டனர். இன்னும் பலர் வயது முதிர்ந்த கைகளில் புகைப்படங்களை ஏந்திக்கொண்டு போராட்ட வரிசையில் நிற்கின்றனர். அவர்களுக்கான நீதியைத்தான் செம்மணியில் எழும் எலும்புக்கூடுகள் கேட்கின்றன.

செம்மணியின் மண்ணுக்குள் இன்னும் எத்தனை கதைகள் புதைந்திருக்கின்றன என்பது தெரியாது. ஆனால் ஒன்று மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது. இந்த மண் இனியும் மௌனமாக இருக்காது. மண்ணின் கீழிருந்து எழும் எலும்புக்கூடுகள் வெறுமனே சாட்சிகள் மாத்திரமல்ல. நீதிக்காக போராடும் உயிருள்ள வரலாறுகள். செம்மணிக்கான நீதி என்பது சில எலும்புகளை அடையாளம் காண்பதல்ல. அது ஈழத் தமிழர் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறையின் உண்மையை ஏற்றுக் கொள்வதும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச் செய்வ தும், இனப்படுகொலையை மறுப்பதற்கான ஸ்ரீலங்கா அரசின் எல்லா முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுமாகும்.

அந்த நீதியை வழங்கும் வல்லமை, இதுவரை தோல்வியடைந்த உள்நாட்டுப் பொறிமுறைகளில் இல்லை. சுயாதீனமான,நம்பகமானசர்வதேசவிசாரணையும்சர்வதேச நீதிப் பொறிமுறைகளுமே செம்மணிக்கும், காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கும், இன்னும் காத்திருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கும் உண்மையான நீதியைப் பெற்றுத்தரக்கூடிய ஒரே வழியும் தீர்வுமாகும்.

• • •

# மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் வழங்கும்
# ‘’வர்ணங்களின் ஊடாக மன வலிகளுக்கு சிறு ஓய்வு….”

**மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற போர் காரணமாக பாதிக்கப்பட்ட பெண்களின் வெளிப்பாடுகளை கொண்ட காண்பியக் காட்சி!**

"போரின் தாக்கங்களைக் கடந்து வாழ்ந்து வரும் பெண்கள் உருவாக்கிய வலிமைமிக்க கலைப்படைப்புகளின் ஊடாக வெளிப்படும் வலி.மன உறுதி, நம்பிக்கை மற்றும் ஏக்கத்தின் கதைகளை உள்ளடக்கியிருக்கும் இந்தப் பயணத்தில் எங்களுடன் இணைந்திடுங்கள்…"
















மருதன் ராம்

இலங்கைத் தீவின் பல்லின, பல்சமயக் கட்டமைப்பில் மலையகத் தமிழர்கள் எனப்படும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில், தென்னிந்தியாவிலிருந்து ஒப்பந்தத் தொழிலாளர்களாக இலங்கையின் மத்திய, ஊவா, சப்ரகமுவ போன்ற மாகாணங்களின் தேயிலை, இறப்பர் தோட்டப் பணிகளுக்காக அழைத்து வரப்பட்டவர்களின் சந்ததியினரே இவர்களாவர்.



தங்களது வியர்வையையும் குருதியையும் சிந்தி, இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் தேயிலைத் துறையை இந்நாட்டிற்குப் பரிசளித்த இச்சமூகம், இருநூறு ஆண்டுகள் கடந்தும் இன்னும் பல அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றமை ஒரு வரலாற்று முரண்பாடாகும். அண்மையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவினர், இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மெத்யூ டக்வொர்த்தை (Matthew Duckworth) சந்தித்து கலந்துரையாடிய நிகழ்வு, மலையக மக்களின் சமகாலப் பிரச்சினைகளை மீண்டும் ஒருமுறை சர்வதேச மற்றும் தேசிய தளங்களில் பேசுபொருளாக்கியுள்ளது.

மலையகத் தமிழர்களின் வரலாறு என்பது வெறும் உழைப்பின் வரலாறு மட்டுமல்ல, அது தொடர்ச்சியான அடக்குமுறைகளுக்கும், அதற்கெதிரான உரிமைப் போராட்டங்களுக்கும், உயிர்வாழ்விற்கான தியாகங்களுக்கும் சான்றாகும். நீண்ட காலமாக இச்சமூகம் 'தோட்டத் தொழிலாளர்கள்' அல்லது 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' என்றே அடையாளப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், இன்று இச்சமூகம் வெறும் தோட்டத் தொழிலாளர் என்ற குறுகிய வட்டத்திற்குள் சுருங்கிவிடவில்லை. இந்த விடயம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்ட குழுவினர் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் முக்கிய விடயங்களை குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக "மலையகத் தமிழ் சமூகம் இனிமேலும் அதன் வரலாற்றுப் பின்னணியான ஒப்பந்தத் தொழிலாளர் என்ற ஒற்றைக் கண்ணோட்டத்துடன் மட்டும் பார்க்கப்படக் கூடாது. அவர்கள் இன்று இலங்கையின் நான்காவது பெரிய தேசிய இனமாக, தமக்கே உரிய பிரத்தியேக அடையாளத்துடன் பரிணமித்துள்ளனர்." என்று அவர்கள் எடுத்துரைத்துள்ளனர். "இன்று மலையக இளைஞர்கள் கல்வி, வர்த்தகம், அரச மற்றும் தனியார் துறைகள், கலை, அரசியல் எனப் பல்வேறு துறைகளிலும் தடம் பதித்து வருகின்றனர். எனவே, இவர்களை வெறும் 'தோட்டத் தொழிலாளர்கள்' எனக் கருதுவது அவர்களின் ஒட்டுமொத்த சமூக வளர்ச்சியை நிராகரிப்பதாக அமையும்" என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, மலையக மக்களின் குடியுரிமைப் போராட்டம் மற்றும் தற்போதைய அரசியல் நிலை என்பன தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. "மலையக மக்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட காலம் தொட்டே இந்நாட்டின் குடிமக்களாக வாழ்ந்த போதிலும், 1948இல் இலங்கை சுதந்திரமடைந்தவுடன் அவர்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் துரோகம் மிகக் கொடூரமானது. 1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம் மற்றும் 1949ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தல் (திருத்தச்) சட்டம் ஆகியவற்றின் மூலம், மலையக மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டன. ஒரே இரவில் சுமார் 10 இலட்சம் மக்கள் 'நாடற்றவர்களாக' மாற்றப்பட்டனர்.

இது இலங்கையின் ஜனநாயக வரலாற்றில் ஒரு கரும்புள்ளியாகும். பின்னர், சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் (1964) மற்றும் சிறிமா - இந்திரா காந்தி ஒப்பந்தம் (1974) ஆகியவற்றின் மூலம் லட்சக்கணக்கான மலையக மக்கள் கட்டாயமாக இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எஞ்சியவர்களுக்கு நீண்டகாலப் போராட்டங்களுக்குப் பின்னரே, 1980களின் பிற்பகுதியிலும் 2003ஆம் ஆண்டின் சிறப்புச் சட்ட மூலமும் முழுமையான குடியுரிமை வழங்கப்பட்டது" என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குடியுரிமை மற்றும் வாக்குரிமை சட்டப்பூர்வமாகப் பெறப்பட்ட போதிலும், சமத்துவக் குடியுரிமை என்பது இன்னும் முழுமையாக எட்டப்படவில்லை என்று தமிழ் முற்போக்கு கூட்டணியினர் தெரிவித்துள்ளனர். மலையகத் தலைமைகள் இன்று வலியுறுத்துவது வெறும் சட்ட ரீதியான குடியுரிமையை மட்டுமல்லாது தேசிய அபிவிருத்தியில் சமமான பங்குடமை, அரச நிர்வாகக் கட்டமைப்பில் முறையான பிரதிநிதித்துவம் மற்றும் பின்தங்கிய மலையகப் பிரதேசங்களுக்கான தனியான அபிவிருத்தித் திட்டங்கள் என்பனவும் முழுமையாக உறுதி செய்யப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

குறிப்பாக காணி உரிமை விடயத்தில் நிலவும் சிக்கல்கள் தொடர்பாகவும் இந்த சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. மலையகத் தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் மிக அடிப்படையான மற்றும் நீடித்த பிரச்சினை காணி உரிமை மற்றும் பாதுகாப்பான வீட்டு வசதியின்மையாகும். தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் பிரித்தானியர் காலத்தில் கட்டப்பட்ட 'இலயங்கள்' (Lines) எனப்படும் 10X10 அடி அளவுள்ள குறுகிய அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில் மலையக மக்கள் சார்ந்து ஒத்துழைப்பை வழங்குமாறு பின்வரும் கோரிக்கைகள் தமிழ் முற்போக்கு கூட்டணியினரால் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. **வீட்டுப் பாதுகாப்பு**
2. **சமூக நடமாட்டம் மற்றும் அந்தஸ்து**
3. **வாழ்வாதார மேம்பாடு**
4. **முகவரி மற்றும் சட்டபூர்வ அடையாளம்**

அதேநேரம் பாதுகாப்பான நிலவுரிமை இல்லாததன் காரணமாக மலையக மக்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும்இதன்போதுகலந்துரையாடப்பட்டுள்ளது.மலையக மக்கள் வாழும் நிலங்கள் அனைத்தும் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமானவையாகும்.

இதனால், தங்களுக்கு என ஒரு துண்டு நிலத்தையோ அல்லது வீட்டையோ சொந்தமாக்கிக் கொள்ளும் உரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. காணி உரிமை இல்லாததால் உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படும் வீதி, மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகளைத் தடையின்றிப் பெற முடிவதில்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தலா 7 பேர்ச் காணி வழங்கி, தனிவீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டங்கள் கடந்த அரசாங்கங்களால் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவை இன்னும் மந்தகதியிலேயே சாத்தியமாகியுள்ளன.

தமிழ் முற்போக்கு கூட்டணியினர் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தியது போல, காணி உரிமை என்பது வெறும் தங்குமிடம் சார்ந்தது மட்டுமல்ல, அது சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பிற்கு அவசியமான ஒரு பிரதான காரணியாகும். அதேபோன்று மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் மலையக மக்களுக்கு பாரிய சவாலாக உள்ள நிலையில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) இலங்கையில் மண்சரிவு அபாயப் பகுதிகளைக் கண்டறிந்து, டிஜிட்டல் வரைபடமாக்கல் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



இந்த நிறுவனத்தின் நவீனமயமாக்கலுக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் நிதி உதவி வழங்கி வருகிறது. பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் இந்தச் சந்திப்பின் போது அவுஸ்திரேலியாவின் இந்த உதவிக்குத் தனது நன்றியைத் தெரிவித்ததுடன், தொழில்நுட்ப ரீதியாக பலப்படுத்தப்பட்ட தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன அமைப்பின் மூலம், இடம்பெயர்ந்த மக்களுக்கான பாதுகாப்பான நிலங்களை விரைவாகக் கண்டறிந்து, மீள்குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

அத்துடன் மலையக மக்கள் எதிர்நோக்கும் சமூக, கல்வி மற்றும் பொருளாதார சவால்கள் தொடர்பாகவும் வேதனம் சார்ந்த போராட்டங்கள் தொடர்பாகவும் இந்த சந்திப்பின்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன. குறிப்பாக மாணவர்களின் பாடசாலை இடைவிலகல் மற்றும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினைகளில் அவுஸ்திரேலியாவினால் வழங்கக்கூடிய உதவிகளை பெற்றுத்தர தாம் தயாராக இருப்பதாக அந்நாட்டு உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். இதேவேளை தமிழ் முற்போக்கு கூட்டணியினர் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் முன்வைத்த ஒரு முக்கிய அரசியல் பொறிமுறைதான் 'தேசியத் தமிழ் சமூகப் பேரவை' ஆகும். பிராந்திய எல்லைகளுக்கு அப்பாற்பட்டு இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால், நாட்டின் ஏனைய மாகாணங்களில் (மத்திய, ஊவா, மேல், சப்ரகமுவ, தென் மாகாணங்கள்) சிதறி

தொடர்ச்சி: பக்கம் 19




கடந்த ஜூன் 20,21,27 ஆகிய மூன்று நாட்களிலும் புலன் மொழி,எழுதுதல் தேர்வுகள் முறையே சிறப்பாக நடைபெற்று நிறைவுற்றது.



சவுத்தோல், டாட்பேட், இல்பேட், நியுமோல்டன், லூட்டன், மில்ற்றன்கீன்சு, சுவின்ரன், வூல்வகம்ரன், லிவப்பூல், வேல்சு என பத்து இடங்களில் ஐக்கிய இராச்சியம் முழுவதிலும் சிறப்பாக நடைபெற்றது.



ஏறக்குறைய நாற்பது ஆண்டுகாலமாக தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தாய்மொழியாகிய தமிழ் கற்பிக்கப்பட்டு வருகிறது. பல இன்னல்களுக்கு மத்தியிலும் தமிழைக் கற்பித்து வந்து இன்று இளைய தலைமுறையிடம் கையளித்த மூத்தவர்களுக்கு அகமகிழ்ந்து நன்றி கூறுகிறோம்.

அசுர வேகத்தில் வளர்ந்துவரும் அறிவியலும் அதனால் எழுந்த புதிய உலகப் பார்வையும் மனிதர்களை ஒரு புதிய யுகத்திற்கு இன்று இட்டுச் செல்கின்றன. இந்த அறிவியல் வளர்ச்சிக்கும் காலமாற்றத்திற்கும் சமூகப் பண்பாட்டுப் புறநிலைகளுக்கும் ஏற்ப சிந்தனை உலகமும் மாற்றங்களைச் சந்திக்கிறது! ஏட்டிலிருந்து-எண்ணியலுக்கு ஒரு புரட்சி! சாதாரணமாக காகிதங்களில் நடந்த தேர்வு பல மனித மணித்தியாலங்களையும் பல்லாயிரக் கணக்கான காகிதங்களையும் செலவுசெய்து நடத்தப்பட்ட தேர்வு, இன்று குறைந்த வளங்களுடன் நிறைந்த அடைவுகளும் வினைத்திறனான செயற்பாடுகளும் எமது தொழில்நுட்பப் பிரிவின் மகத்தான சாதனைகளுள் ஒன்று.



*கனவுகள் மெய்ப்படும்* எம் இனம் கண்ட கனவு அடுத்த தலைமுறை என்ற ஏக்கம் அனைத்தும் ஒருங்கே அமைய அஞ்சலோட்டத்தில் அஞ்சற்தடியை அடுத்த தலைமுறையின் கைகளிற்குக் காலம் மாற்றியுள்ளது என்ற வரலாற்று உண்மையை நாம் அனைவரும் ஏற்கின்ற அளவிற்கு மனதைப் பக்குவப்படுத்த வேண்டும்.

“சான்றோரைப் போற்றுவதும், கற்றோருக்கு மதிப்பளிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு, எமது சீரிய பண்பாடு, தாய்மொழி, கலை பண்பாடு, வரலாறு, விளை யாட்டு அனைத்துக்கும் தமிழர் கலை கல்வி நடுவம் ஒரு தளமாக இருந்து அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும்..

“செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்கசெய் யாமை யானுங் கெடும்” பேரன்பும் பெரும் பொறுப்பும் கொண்டு அழைக்கிறோம் வரலாற்றை இந்தத் தலைமுறை தவற விட்டால் எம்மினத்தின் தொடர்ச்சி கேள்விக்குறி ஆகிவிடும்.



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிதென்று வாழ்வோம்” ஊர்கூடித் தேரிழுப்போம் வாருங்கள் வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்! இரு கரம் கூப்பி வரவேற்கிறோம் வாழ்த்துகள் வளமுடன் வாழ்க..

***தமிழே எங்கள் அறம்***
**தமிழர் கலை கல்வி நடுவம்**
**ஐக்கிய இராச்சியம்**

 © 2026 இலக்கு இணையம்




ஐக்கிய நாடுகள் சபையின் (UN) எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது; இதற்கு முக்கிய காரணம், அதன் உறுப்பு நாடான ஈரானைக் கண்டிக்க அது மறுப்பதே ஆகும். மே மாதத்தில், வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ ஐ.நா.வை இவ்வாறு கடிந்துகொண்டார்.



"சர்வதேச சமூகமும் நூற்றுக்கணக்கான நாடுகளும் இதற்கு ஆதரவாக ஒன்றிணைய முடியாது என்று நீங்கள் என்னிடம் கூறினால், ஐ.நா. அமைப்பின் பயன் என்ன வென்றே எனக்குத் தெரியவில்லை."

ஐ.நா.வுடனான அனைத்து உறவுகளையும் துண்டிப்பதற்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் (Congress) சட்டம் தேவைப்படலாம்; இருப்பினும், அமெரிக்கா அந்த திசையிலேயே நகர்ந்து கொண்டிருக்கிறது. பிப்ரவரி 4, 2025 அன்று பிறப்பிக்கப்பட்ட நிர்வாக உத்தரவு எண் 14199-இன் படி, 31 ஐ.நா. அமைப்புகளிலிருந்து அமெரிக்கா விலக உத்தரவிடப்பட்டது. ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்காவுக்கு உள்ள 'வீட்டோ' (மறுப்பு) அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் பதவியை ரூபியோ எந்தளவுக்கு முக்கியமாகக் கருதுகிறார் என்பதில்தான் பல விஷயங்கள் அடங்கியுள்ளன.




ஐ.நா. என்பது அவ்வப்போது சில நன்மைகளைச் செய்யும்,ஆனால்அடிப்படையில்பயனற்றஒருஅதிகாரத்துவ அமைப்பாகவே பெரும்பாலும் பார்க்கப்படுகிறது. ஆனால் அது அவ்வளவு நற்பண்புகள் கொண்ட அமைப்பு அல்ல. அதன் தோற்றம் நல்ல நோக்கத்துடன் இருந்திருக்கலாம்; ஆனால் தற்போதைய ஐ.நா., தான் எதிர்ப்பதாகக் கூறும் அதே தன்மைகளைக் கொண்ட அமைப்பாக மாறிவிட்டது. அமெரிக்கா உடனடியாகவும் முழுமையாகவும் ஐ.நா.விலிருந்து வெளியேற வேண்டும்; ஏனெனில் அதன் அநீதியான கொள்கைகள் விரைவில் இன்னும் மோசமடையக்கூடும் என ரூபியோ தெரிவித்துள்ளார்.

"ஐக்கிய நாடுகள் சபையின் மக்களாகிய நாங்கள்... அடிப்படை மனித உரிமைகள், மனிதனின் கண்ணியம் மற்றும் மதிப்பு, ஆண்கள் மற்றும் பெண்களின் சம உரிமை கள் ஆகியவற்றின் மீதான நம்பிக்கையை மீண்டும் உறுதிப் படுத்த உறுதிபூண்டுள்ளோம்..." என ஐ.நா. சாசனம் (1945) இவ் வாறு தெரிவித்துள்ளது.

**அதன் 'மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத் தின்' (1948) முன்னுரை இவ்வாறு கூறுகிறது:**
"மனிதக் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களின் உள் ளார்ந்த கண்ணியம் மற்றும் சமமான, பறிக்க முடியாத உரிமைகளை அங்கீகரிப்பதே உலகில் சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான அடித்தளமாகும்..."

**அப்பிரகடனத்தின் 2-வது பிரிவு கூறுவதாவது:**
"இன, நிற, பாலின வேறுபாடுகள் ஏதுமின்றி, இந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உரிமைகளை யும் சுதந்திரங்களையும் பெற ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு..."

இயற்கை, கடவுள் அல்லது சட்டம் என எதுவாக இருந்தாலும், 'அனைத்து மனிதர்களும் சமமானவர்கள்' என்பதே மேற்கத்திய நீதியின் அடிப்படையாகும். ஆனால், சமத்துவத்தை முன்னெடுப்பதற்குப் பதிலாக, ஐ.நா. இப்போது சமத்துவமின்மையையும் பிளவையும் உரு வாக்கும், 'வோக்' (woke - முற்போக்கு என்ற பெயரிலான தீவிர அரசியல் நிலைப்பாடு) மற்றும் ஊழல் நிறைந்த ஒரு அமைப்பாக மாறியுள்ளது. ஐ.நா.வின் நிதி முறை கேடுகள், களப்பணியாளர்களால் நிகழ்த்தப்படும் பாலியல் துஷ்பிரயோகம், மேற்கத்திய நாடுகளை அது அரக்கத் தனமாகச் சித்தரிப்பது போன்றவை, ஜெனீவாவைத் தள மாகக் கொண்ட 'UN Watch' என்ற அரசு சாரா அமைப்பின் 'கண்காணிப்பாளர்களிலிருந்து சித்தாந்தவாதிகள் வரை: அரசியல்மயமாக்கப்பட்ட ஐ.நா. அறிக்கையாளர்கள் மனித உரிமைகளை எவ்வாறு சீர்குலைக்கிறார்கள்' என்ற 104 பக்க அறிக்கையில் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.



ஐ.நா.வின் வெளிப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பு என்பதுசமத்துவத்தில்அல்ல,மாறாகசமநீதியில்வேரூன்றிய சமூக நீதி அல்லது விழிப்புணர்வுக்கானது. சமநீதி என்பது, ஒடுக்குபவர்களாகக் கருதப்படுபவர்களிடமிருந்து, ஒடுக்கப் பட்டவர்களாகக் கருதப்படுபவர்களுக்குச் செல்வத்தையும் அதிகாரத்தையும் மறுபகிர்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சமநீதி என்பது சட்டத்தின் கீழ் உள்ள சமத்துவத்திற்கு நேர் எதிரானது.

ஐ.நா.வின் பணிக் குழு கூறுவது போல, பெண் களுக்குச் சமமாகக் கருதப்படாத ஆண்களை அது நடத்தும் விதத்தைக் கவனியுங்கள். "பாலின சமத்துவத்திற் கான உலகளாவிய பாதுகாவலர்" என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஐ.நா. பெண்கள் ஆணையத்தின் முக்கிய இருப்பு இதற்கு ஒரு தெளிவான உதாரணமாகும். "ஒவ்வொரு பெண்ணும் சிறுமியும் தனது முழுத் திறனையும் வெளிப்படுத்துவதை" உறுதி செய்வதே தனது இலக்கு என்று அந்த ஆணையம் குறிப்பிடுகிறது. ஆண்கள் அல்லது சிறுவர்களைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. இதற்கு ஒப்பான ஐ.நா. ஆண்கள் அமைப்பு எதுவும் இல்லை, இருப்பினும் ஆணாதிக்கத்தை எதிர்க்க அவர்களுக்குப்

தமிழில்: **ஆர்த்திகன்**

பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை அங்கீகரிப்பதன் மூலம் ஆண்கள் ஓரளவு சேர்க்கப் பட்டுள்ளனர்.



ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியம் (UNF-PA) விளக்குகிறது, பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரவும் UNFPA உலகெங்கிலும் உள்ள ஆண்கள் மற்றும் சிறுவர்களுடன் இணைந்து செயல்படுகிறது. இந்தத் திட்டங்கள், ஆண்கள் மற்றும் சிறுவர்களைத் தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரியான எண்ணங்களைக் கைவிடவும், மரியாதையான, ஆரோக்கியமான உறவுகளைப் பேணவும், எல்லா இடங்களி லும் உள்ள அனைத்து மக்களின் மனித உரிமைகளை ஆதரிக்கவும் ஊக்குவிக்கின்றன.

இருப்பினும், வறுமை, கல்வி இல்லாமை, வன் முறை, நோய் மற்றும் தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரி யான எண்ணங்கள் உட்பட, பெண்களைப் போலவே ஆண் களும் பல உலகளாவிய பிரச்சனைகளை எதிர்கொள் கின்றனர். ஆண்கள் மட்டுமேயான கட்டாய இராணுவச் சேவை, தந்தைவழி மோசடி, பொய்யான கற்பழிப்பு குற்றச்சாட்டுகள் மற்றும் ஒரே குற்றங்களுக்கு நீண்ட கால சிறைத்தண்டனைகள் போன்ற தனித்துவமான பிரச்சனை களையும்ஆண்கள்எதிர்கொள்கின்றனர்.ஆயினும்கூட,ஐ.நா. பெண்கள் மீது காட்டும் முக்கியத்துவத்துடன் ஒப்பிடும்போது, ஆண்கள் கிட்டத்தட்ட புறக்கணிக்கப்படுகிறார்கள். அதுவும் வேண்டுமென்றே அவ்வாறு செய்யப்படுகிறது.



பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான ஐ.நா. உடன்படிக்கை (CEDAW), பலரால் பெண்களுக்கான சர்வதேச உரிமைகள் மசோதாவாகக் கருதப்படுகிறது. மீண்டும், ஆண்களுக்கு ஒப்பிடத்தக்க அமைப்பு எதுவும் இல்லை. CEDAW-இன் ஒரு கிளையின் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பகுதி,

**தொடர்ச்சி: பக்கம் 19**




வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயத்துல்லா சையத் அலி கமேனியின் இறுதி நிகழ்வு மிகப்பெரிய நிகழ்வாக ஈரான் ஏற்பாடு செய்து ஒரு வார நிகழ்வாக அனுஸ்ட்டித்து வருகின்றது.



ஊடகங்களின் கணிப்புப்படி, ஈரானின் உயரிய தலைவருக்கான விடைபெறும் நிகழ்வு வரலாற்றிலேயே அதிக மக்கள் பங்கேற்கும் நிகழ்வாக அமையும். ஊடகத் தகவல்களின்படி, ஈரானின் உயரிய தலைவரான அயதுல்லா சையத் அலி கமேனியின் இறுதிச் சடங்கில் பல்வேறு நாடுகள் மற்றும் நகரங்களைச் சேர்ந்த 18 முதல் 35 மில்லியன் மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. தெஹ்ரானின் என்கேலாப் சதுக்கத்தில், அலி கமேனியின் உயர்த்தப்பட்ட முஷ்டியின் வடிவிலான ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.



கொல்லப்பட்ட அயதுல்லா சையத் அலி ஹமெனிக்கான இறுதிச் சடங்குகளை ஈரான் மற்றும் ஈராக்கில் மட்டுமே ஏற்பாடு செய்துள்ளது ஈரான். இந்தச் சடங்குகளின் மூலம், அது உள்நாட்டு மக்களுக்கும், பிராந்திய மற்றும் சர்வதேச நாடுகளுக்கும் ஒரு செய்திகளை அனுப்புகிறது என எலிஜா ஜே. மேக்னியர் என்ற ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

ஈரானிய முடிவெடுப்பவர்களில் யார் தோன்றுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். எந்தப் பிரதிநிதிகள் குழுக்கள் வரவேற்கப்படுகின்றன, அவர்களை யார் வரவேற்கிறார்கள், மற்றும் எந்த வரிசையில் வரவேற்கப்படுகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு வருடத்திற்கும் மேலாக போரின் காரணமாக “பலவீனமான ஈரான்” என்ற கதையைப் பரப்பி வருபவர்கள் இருந்தபோதிலும், ஈரான் தனது உள்நாட்டு ஒற்றுமையை மீண்டும் உறுதிப்படுத்த இந்தத் தருணத்தை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைக் கவனியுங்கள்.

ஈரானின் கவனமாக வடிவமைக்கப்பட்ட சடங்கு அல்ல இது, மாறாக அதன் எதிரிகளால் அதைச் சரியாகப் புரிந்துகொள்ள இயலாமையே மிகவும் வியக்கத்தக்கது. எனக்கு ஆச்சரியமாக உள்ளது, 47 ஆண்டுகளாக அதே ஆளும் அமைப்பை எதிர்கொண்ட பிறகும், இஸ்ரேலும் - அமெரிக்காவும் ஈரானைப் புரிந்துகொள்ளவில்லை என்றே தோன்றுகிறது என அவர் தெரிவத்துள்ளார்.



அதேசமயம், ஈரானின் உயரிய தலைவர் அலி கமேனியின் பிரம்மாண்ட இறுதிச் சடங்கு ட்ரம்பிற்கு ஒரு செய்தியை சொல்லியுள்ளதாக அமெரிக்க ஊடகமான சி.என்.என் தெரிவித்துள்ளது.

உலகின் வலிமையான இரண்டு ராணுவங்களுடனான கடுமையான போர் மற்றும் பல தசாப்தங்களாக நீடிக்கும் மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் இருந்தபோதிலும், ஈரானின் உயரிய தலைவர் அயதுல்லா அலி கமேனியின் நினைவை ஈரான் போற்றி நிலை நிறுத்துகிறது. வெள்ளிக்கிழமை தொடங்கிய இந்த ஒரு வார கால துக்க நிகழ்வுகள், இரண்டு நாடுகளில் உள்ள ஐந்து நகரங்களில் நடைபெறவுள்ளன.

இந்தத் துக்க நிகழ்வுகளில் லட்சக்கணக்கான மக்களும், பிற நாடுகளைச் சேர்ந்த டஜன் கணக்கான அதிகாரப்பூர்வ தூதுக்குழுக்களும் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஷ்யாவின் சார்பில், ரஷ்ய அரசுத் தலைவரின் சிறப்புத் தூதரும்இ ரஷ்ய கூட்டமைப்பின் பாதுகாப்பு சபையின் துணைத் தலைவருமான டிமிட்ரி மெத்வதேவ் பங்கேற்கிறார். இந்தச் சடங்கின் பிரம்மாண்டமான அளவுஇ உலகம் முழுவதற்கும் மற்றும் இஸ்லாமியக் குடியரசின் எதிரிகளுக்கும் ஒரு செய்தியை அனுப்பும் நோக்கம் கொண்டது: அதாவதுஇ ஈரான் தனது இருத்தலுக்கே அச்சுறுத்தலாக அமைந்த போரிலிருந்து தப்பித்தது மட்டுமல்லாமல், கொல்லப்பட்ட தலைவரின் நினைவை தனது வலிமை மற்றும் உறுதியின் அடையாளமாகத் தொடர்ந்து நிலைநிறுத்தும் என்பதை இது உணர்த்துகிறது.



இந்தச் சடங்கு நடைபெறும் தேதிகள் குறியீட்டு முக்கியத்துவம் வாய்ந்தவை. அதாவது அமெரிக்க சுதந்திரத்தின் 250-வது ஆண்டு விழாவன்று அயதுல்லாவின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. இவை அனைத்தும் இஸ்லாமிய மாதமான முஹர்ரம் மாதத்தில் நடைபெறுகின்றன; ஷியா இஸ்லாத்தில் இக்காலம் துக்கம், துரோகம் மற்றும் தியாகம் ஆகியவற்றுடன் ஆழமாகத் தொடர்புடையது.

“நாம் எழுந்து நின்று உலகிற்குத் தெரிவிக்க வேண்டும்; அடக்குமுறைக்கு எதிராக ஈரானின் கண்ணியமான மற்றும் உன்னதமான தேசம் மௌனமாக இருக்காது என்பதையும். தங்கள் இமாமின் இரத்தத்தை மறக்காது என்பதையும் உலகம் அறிய வேண்டும்” என்று ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாஃப் கூறினார்.

ஈரானை முறியடிக்கத் திட்டமிடப்பட்ட ஒரு போர், அந்நாட்டை பாரசீக வளைகுடாவில் ஒரு முக்கிய சக்தியாக மாற்றக்கூடும் என முன்னர் ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்திருந்தது. மேலும், ஈரானுடனான போரில் ஏற்படும் தோல்வி இறுதியில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை தகர்த்துவிடும் என்ற பேராசிரியர் ஜியாங்கின் கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, போரின் தொடக்கத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட மறைந்த உச்ச தலைவர் அயதுல்லா அலி கமெனியின் வரவிருக்கும் இறுதி ஊர்வலங்களின் போது எந்தத் தாக்குதல்களையும் நடத்த வேண்டாம் என்று அமெரிக்காவையும் இஸ்ரேலையும் ஈரான் எச்சரித்துள்ளது. அதேவேளையில், பலத்த பாதுகாப்புக்களையும் அது மேற்கொண்டுள்ளது.

“ஈரானின் எதிரிகள், குறிப்பாக அமெரிக்கா மற்றும் சியோனிச ஆட்சி, எந்தவொரு தவறான கணிப்பையும் தவிர்க்க வேண்டும் என்றும், எங்கள் நாட்டிற்கு எதிரான எந்தவொரு அச்சுறுத்தல் மற்றும் ஆக்கிரமிப்புக்கும் எங்கள் ஆயுதப் படைகள் கடுமையான பதிலடி கொடுக்கும் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்றும் நாங்கள் எச்சரிக்கிறோம்,” என்று கதம் அல்-அன்பியா மத்திய தலைமையகத்தின் தளபதி அலி அப்தொல்லாஹி வியாழக்கிழமை(02) தெரிவித்துள்ளார்.



ஈரானிய உச்ச தலைவர் மொஜ்தபா கமெனியும், அவரது தந்தையைப் போலவே, “மரணத்திற்காகக் குறிக்கப்பட்டுள்ளார்” என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் திங்களன்று கூறினார். தனது மக்கள் அல்லது தலைமைக்கு எதிரான எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் தெஹ்ரான் உடனடியாகவும் வலுவாகவும் பதிலடி கொடுக்கும் என்று வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி எச்சரித்துள்ளார்.

கமெனியின் அடக்கத்திற்குப் பிறகு வரை மறைமுக அமெரிக்க-ஈரான் பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில் இந்த எச்சரிக்கைகள் வந்துள்ளன. இந்த வாரம் தோஹாவில் நடந்த சமீபத்திய சுற்றுப் பேச்சுவார்த்தைகள், ஹோர்முஸ் ஜலசந்தி

தொடர்ச்சி: பக்கம் 18

## ஈழத்தேச விடுதலை ... தொடர்ச்சி...

படவில்லை 47, வருடங்களாக இந்த கொடிய சட்டம் இன்று வரை உள்ளது.

இந்த சட்டமானது அன்று பயங்கரவாத தடைச் சட்டத்தை தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு எதிராக மட்டுமே தெற்கின் சிங்கள, பௌத்த அரசியல்வாதிகள் பயன்படுத்திய நிலையில் தற்போது அந்த சட்டத்தின் கீழேயே பலரும் கைது செய்யப்படும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

இந்த சட்டம் ஜக்கிய தேசிய கட்சியில் இலங்கை பிரதமராக இருந்த ஜே ஆர் ஜெயவர்தனா அரசில் நீதி அமைச்சராகஇருந்தமட்டக்களப்புமாவட்டகல்குடாத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கே.டபிள்யூ தேவநாயகத்தை கொண்டு 1979 யூலை 19 ல் நிறைவேற்றினார், பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றிய கே. டபிள்யூ. தேவநாயகத்தின் நீதி அமைச்சர் பதவி சரியாக 07, மாதத்தில் 1980,பெப்ரவரி,19, ல் பறிக்கப்பட்டு அவருக்கு உள்ளூராட்சி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது ஜே ஆர் ஜெயவர்தனவின் தந்திரம் பயங்கரவாத்தடைச்சட்டம் நிறைவேற்றுவதற்காக மட்டுமே ஒரு தமிழன் தேவைப்பட்டது அதுவும் வடகிழக்கு தமிழனாக அமைச்சராக மட்டக்களப்பு மாவட்ட கல்குடா தொகுதி தேவநாயகத்துக்கு நீதி அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது என்பதே உண்மை. இது அப்போது தற்காலிக சட்டமாக கூறப்பட்டாலும் பின்னர் 1981 ல் நிரந்தர சட்டமாக்கப்பட்டது.

தமிழரை கொண்டு தமிழரை அழிப்பதற்காகவே ஜே ஆர் இந்த சட்டத்தை நிறைவேற்றினார். ஆனால் 2019, க்கு பின்னர் தற்போது தென்பகுதி சிங்கள மக்கள், சிங்கள அரசியல் வாதிகளுக்கு எதிராகவும் இந்த சட்டம் பிரயோகிக்கும் போதுதான் இந்த சட்டத்தின் கொடுமையை அவர்கள் விளங்கிக்கொண்டனர்.

2012ல் இருந்து 2026 தற்போது வரை உள்ளாட்டு மனித உரிமை அமைப்புகள் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் எல்லாம் இந்த சட்டத்தை நீக்குமாறு தொடர் அழுத்தம் கொடுத்தும் இதுவரை ஜனாதிபதிகளாக இருந்த மகிந்தராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டபாய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க எவருமே வாயால் நீக்குவதாக கூறியும் செயலில் இதுவரை இல்லை.

பயங்கரவாத தடைச்சட்டத்தை தமிழர் ஒரு வரே தயாரித்ததாக கருத்தும் உள்ளது, பயங்கரவாத தடைச் சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்தவரும் தமிழர்தான் என கூறப்பட்டபோதும் அதனை சிலர் மறுப்பதும் உண்டு, பயங்கரவாத தடைச்சட்டத்தை நாடாளுமன்றில் சமர்பிக்கும் போது அதனை எதிர்த்து வாக்களிக்காமல் விலகி இருந்த எதிர்கட்சி தலைவரும் தமிழர்தான், அந்த சட்டத்தால் அதி கூடியவர்களாக பாதிக்கப்பட்டதும் தமிழர்கள்தான் என்ற வரலாற்று உண்மைகளும் உண்டு.

1983 யூலை 23 ல் விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் நடத்திய இராணுவ வாகனம் மீதான தாக்குதல். இதில் 13, இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அந்த சடலங்களை கொழும்பு கனத்தை மயானத்திற்கு கொண்டு சென்று கொழும்பில் இனப்படுகொலைக்கு தூபம் இட்டார் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர் ஜெயவர்தன. ஜே ஆர் தலைமையிலான ஐக்கியதேசிய கட்சி அரசால் திட்டமிட்டு தமிழினப்படுகொலை ஏற்படுத்தப்பட்டது. “கறுப்பு யூலை” என்று அழைக்கப்படும் 1983 யூலை 23 தொடக்கம் 1983 யூலை 30 வரை 07 நாட்களாக கொழும்பு உட்பட தென்பகுதியில் சிங்கள இராணுவமும், சிங்களக்குண்டர்களும் இணைந்து நடத்திய தமிழினப்படுகொலைகளாகும். இதில் ஏறக்குறைய மூவாயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஏறத்தாழ 8,000 தமிழர்கள் வீடுகளும், 5,000 தமிழர்களின் வணிக நிறுவனங்களும் அழிக்கப்பட்டன இக்கலவரத்தின் போது ஏற்பட்ட மொத்தப் பொருளாதாரச் செலவு 300 மில்லியன் என அப்போது மதிப்பிடப்பட்டது. பன்னாட்டு நீதித்துறை வல்லுநர்கள் ஆணையம் என்ற அரசசார்பற்ற அமைப்பு 1983 டிசம்பரில் வெளியிட்ட அறிக்கையில் இது ஒரு இனப்படுகொலை என்று விவரித்தது. சர்வதேச நிறுவனம் இனப்படுகொலை என முதன் முதலாக வெளியிட்ட அறிக்கையாக இதனை கொள்ளலாம்.

1983 யூலை 25 மற்றும் யூலை 27 ஆகிய இரு தினங்களில் முக்கிய இனப்படுகொலைகளாக வெலிக்கடை சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் உட்பட 53, தமிழ் கைதிகள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். இந்த மாதம் 2026, யூலை,23, கறுப்புயூலைக்கு 43, ஆண்டுகள் நினைவாகும்.

1985,யூலை,22,23, இரு தினங்கள் பூட்டான் தலைநகரில் இலங்கை அரசு தமிழர் தரப்பு தமிழர் விடுதலை கூட்டணி, தமிழீழ விடுதலைப்புலிகள், ரெலோ, புளட், ஈபிஆர்எல்எவ், ஈரோஸ் ,ஆகிய இயக்கங்கள் ஒன்றாக இணைந்து பேச்சுவார்த்தை நடைபெற்றது.

1987, யூலை,05, ம் திகதி விடுதலைப்புலிகளின் முதலாவது கரும்புலித்தாக்குதல் யாழ்ப்பாணம் நெல்லியடி இராணுவமுகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலாகும். தாக்குதல் நடத்தியவர் யாழ்ப்பாணம், துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ் ஹாட்லிக் கல்லூரியில் கல்விகற்ற வசந்தன் என்ற இயற்பெயரைக்கொண்ட மில்லர் எனப்படும் கரும்புலி மாவீரர். 2026, யூலை,05, இன்று 39, வது ஆண்டு நினைவாகும். மில்லர் உயிர் நீத்த தினமே கரும்புலி நாளாக விடுதலைப்புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்டது.

1987, யூலை,05, க்கு பின்னர் 2009, மே,18, வரை நூற்றுக்கணக்கான கரும்புலிகள் வீரச்சாவை தழுவினர் என்பது வரலாறு. 1989 ,யூலை ,13,ல் எதிர்கட்சிதலைவராகவும் தமிழர் விடுதலைக்கூட்டணி தலைவராகவும் இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இருவரும் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

1987 யூலை 29 இலங்கை இந்திய உடன்படிக்கை - இந்தியபிரதமர் ராஜீவ்காந்தி மற்றும் இலங்கை ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்தன ஆகியோர் கைச்சாத்திட்டனர். 1987 யூலை 30 இந்தியப்படை ஈழமண்ணில் வருகை (முற்றுகை)2001 யூலை 24 ல் கட்டுநாயக்கா விமானத்தளம் மீதான கரும்புலித்தாக்குதல் இடம்பெற்றதும் இந்த யூலை மாதம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறக்குறைய 12,மறக்கமுடியாத விடயங்கள் ஈழத்தேச விடுதலை அரசியலில் இந்த யூலை மாதமே அரங்கேறியுள்ளது என்பது வரலாறாகும்.

• • •

## டித்வா புயலால் ... தொடர்ச்சி...

மற்றும் இரட்டை லயன் வீடுகளாக மொத்தம் 116,275 வீடுகள் இருப்பதுடன் 1104 மாடிவீடுகள் காணப்படுகின்றன. இந்த லயன் வீடுகள் தோட்ட கம்பனிகளாலும் ஓரளவு பராமரிக்கப்பட்டு வருவதுடன் அரசாங்கத்தின் க்ளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்துடன் இணைந்தும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் மலையக மக்களுக்கு லயன் அறைகளுக்கு பதிலாக காணி உரிமையுடன் நிரந்தர வீட்டுரிமையுடன் அவர்களை குடியமர்த்துதல் அரசாங்கத்தின் கொள்கைக்கமைய அமைச்சரவை நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதன் பிரகாரம் பெருந்தோட்டங்களில் இருக்கும் மலையக மக்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்கு இந்திய வீட்டுத்திட்ட உதவியின் மூலம் 10 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு இலக்கு வைத்திருக்கிறோம். அதில் 4 ஆயிரம் வீடுகளின் வேலைகள் முடிவடைந்திருக்கின்றன. மேலும் 1300 வீடுகளின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த வருட இறுதிக்குள் அந்த கட்டுமான வேலைகள் முடிவடையும் என நம்புகிறோம். அதேநேரம் இந்த வருடத்துக்குள் மேலும் 2026 வீடுகளுக்கான வேலைகளை ஆரம்பிக்க இருக்கிறோம். அடுத்துவரும் வருடங்களில் 2674 வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்றார்.

## இந்தியாவின் ‘நீலப் ... தொடர்ச்சி...

பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் கடல் நீர் போன்ற சூழலை உருவாக்க பொட்டாசியம் மற்றும் மெக்னீசியம் போன்ற தாதுக்களின் அளவைச் சரியாகக் கையாண்டு வருகின்றனர்.

‘நீலப் புரட்சி’ என்பது உலகம் முழுவதும் மீன் வளர்ப்புத் துறையின் விரிவாக்கத்தைக் குறிக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் அந்த மாநிலம் 14,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான இறாலை உற்பத்தி செய்தது.

“நாங்கள் 8.5 ஏக்கர் நிலத்தில் சுமார் 93,000 டாலர் முதலீட்டுடன் இதைத் தொடங்கினோம். முதல் பருவத்திலேயே சுமார் 100,000 டாலர் மதிப்பிலான இறால்களை விற்பனை செய்து அந்தச் செலவு முழுவதையும் ஈடுசெய்துவிட்டோம்,” என்று சோனிபட் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறினார்.

இப்பண்ணைகளில் பிற வகை மீன்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு ஹரியானா 200,000 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான கடல் உணவை உற்பத்தி செய்தது.

குளங்களை அமைக்கவும், உபகரணங்களை நிறுவவும் மற்றும் நவீன நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளைக் கடைப்பிடிக்கவும் விவசாயிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து நிதி ஊக்கத்தொகைகளும் வழங்கப்படுகின்றன.

## சூடானின் துணை ... தொடர்ச்சி...

எதிர்கொண்டுள்ளனர்; இதில் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள், கைவிடப்படுதல் மற்றும் அத்தியாவசிய உதவிகள் மறுக்கப்படுதல் ஆகியவை அடங்கும்” என்றும் அது மேலும் கூறியது.

ஜகாவா(Zaghawa)இனமக்கள்பெரும்பான்மையாக வசிக்கும் எல்-ஃபாஷரைச் சுற்றியுள்ள கிராமங்கள் மற்றும் நகரங்கள் மீது RSF தொடர்ந்து தாக்குதல் நடத்தியதை அந்த அறிக்கை சுட்டிக்காட்டியது. ஐக்கிய நாடுகள் சபையின் தகவலின்படி, ஏப்ரல் 2023 முதல் சூடான் ராணுவத்திற்கும் RSF-க்கும் இடையே நடைபெற்று வரும் கொடூரமான போரில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் சுமார் 1.4 கோடி (14 மில்லியன்) மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இரு தரப்பினர் மீதும் கொடூரமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன; பிப்ரவரி மாதம் ஐ.நா-வின் சுயாதீன உண்மை கண்டறியும் குழு, எல்-ஃபாஷர் மீதான 2025-ஆம் ஆண்டு தாக்குதல் “இனப்படுகொலைக்கான அறிகுறிகளைக்” கொண்டிருந்ததாகத் தெரிவித்தது.

## ஏக்கிய ராஜ்யவைத் ... தொடர்ச்சி...

வேண்டியது ஏற்கனவே 2015, காலத்தில் நல்லாட்சி அரசில் தமிழ் தேசிய கூட்டமைப்பு மூலமாக தமிழரசுக்கட்சி ஏற்றுக்கொண்ட “ஏக்கியராஜ்ய”அரசியல் அமைப்பு நிறைவேற்றப்படுவதை தடுக்குமாறும் முதலமைச்சர் விஜய் இடம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்தேசம் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த்தேசத்தின் தனித்துவ மான இறைமையின் அடிப்படையில் சுய நிர்ணய உரிமையை அனுபவிக்க கூடிய கூட்டாட்சி முறைமையை உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே ஈழத்தமிழ் மக்களின் அவசரமான எதிர்பார்ப்பு என்பதையும் தமிழ்தேசிய பேரவை மூலமாக ஏழுபேரும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த சந்திப்பின் மூலம் ஈழத்தமிழ்தேசிய கட்சி தமிழ்நாட்டு புதிய முதலமைச்சர் விஜய்யை முதலாவதாக சந்தித்த கட்சி என்ற பெயரை பெற்றுள்ளனர். இந்த அறிகையில் எனக்கொரு சந்தேகம் அநுர குமார திசநாயக்கா அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட “ஏக்கிய ராஜ்ய” (ஒற்றையாட்சி) அரசியல் அமைப்பு என குறிப்பிட்டுள்ளனர் தேசிய மக்கள் சக்தி அநுர அரசு பதவி ஏற்று ஏறக்குறைய 21, மாதங்கள் கடந்துள்ளன ஆனால் இதுவரை எந்த புதிய அரசியல் யாப்பும் அநுர குமார திசநாயக்கா அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டதாக இதுவரை நான் அறியவில்லை ஆனால் முன்மொழியப்பட்ட அறிக்கை என குறிப்பிட்டுள்ளனர் இது எப்போது முன்மொழிந்தனர் என்பதை தெளிவாக திகதியுடன் குறிப்பிட்டிருந்தால் நல்லது.

## தமிழகத்தினூடான தாயக ... தொடர்ச்சி...

விடப்பட்டவர்கள் அல்ல, அவர்களுக்குப் பின்னால் எட்டுக்கோடித் தமிழக மக்கள் எப்போதும் துணையாக நிற்பார்கள்’ என்ற பலமான எச்சரிக்கையைச் சர்வதேசத் தளத்தில் பறைசாற்றும்.

இருப்பினும், இந்த அரசியல் அணுகுமுறையானது வெறும் உணர்ச்சிப் பேச்சுகளோடு கடந்துபோகாமல், இரு தரப்பு உறவுகளில் உள்ள யதார்த்தமான சவால்களைக் கையாள்வதிலேயே அதன் முழுமையான சாத்தியப்பாடு தங்கியுள்ளது. சர்வதேச உறவுகளில் ‘யதார்த்தவாதம்’ என்பது மிக முக்கியமானது. நிரந்தர நண்பனும் இல்லை, நிரந்தர எதிரியும் இல்லை. நலன்களே நிரந்தரம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இருதரப்புச் சவால்களையும் அணுக வேண்டும்.

இந்திய மற்றும் தாயகத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பது இரு தரப்புத் தொப்புள்கொடி உறவையும் சிதைப்பதற்காகச் சிங்களப் பேரினவாத அரசால் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பட்டு வரும் நச்சு ஆயுதமாகும்.

இதற்குப் பரஸ்பரப் புரிதலுடனும், கூட்டு நல்வாழ்வு அடிப்படையிலும் நிலையானதொரு தீர்வைக் காண்பதன் மூலமே தமிழகத்தின் ஆதரவை முழுமையாகத் தக்கவைக்க முடியும்.

அதேபோன்று, தமிழகத்தில் தங்கியுள்ள தாயகத் தமிழ் அகதிகளின் நீண்டகாலக் குடியுரிமை மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, தமிழக அரசு இந்திய மத்திய அரசுக்கு வழங்கும் அழுத்தங்களிலேயே தங்கியுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் சீனா உள்ளிட்ட இதர சக்திகளின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும், இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்புச் சமநிலை அச்சுறுத்தலுக்குள்ளாகி வருவதும் இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய புறக்காரணிகளில் மிகவும் முக்கியமானதாகும்.

இத்தகைய புவிசார் அரசியல் சூழல்கள் மாறும் போது, இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை தாயகத் தமிழர்களுக்குச் சாதகமாகத் திருப்புவதற்குத் தமிழகத்தின் ஒருமித்த அரசியல் அழுத்தமே முதன்மை உந்துசக்தியாக அமையும்.

அந்த தாயகத் தமிழர்கள் சர்வதேசத் தளத்திலும் பிராந்தியத் தளத்திலும் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான ஜனநாயக, இராஜதந்திர முயற்சிகள் ஒருபோதும் வீண்போகாதிருக்க வேண்டுமாயின் தமிழகத்தின் புதிய அரசியல் தலைமையை தாயகத்தின் தமிழ்த் தேசியப் பேரவை போன்ற துடிப்புள்ள அரசியல் சக்திகளின் தொடர்ச்சியான அணுகல்களே தமிழ் தேசத்துக்கும், தமிழினத்துக்குமான விமோசனத்திற்கான புதிய வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கும்.

தாயக தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய முதல்வர் விஜயால் முடியுமா இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்களை விடுத்து தற்போதைய முயற்சியை உள்ளக அரசியல் கொம்புசீவல்களுக்கு பயன்படுத்தி னால் வாசல்வரையில் கொண்டுவந்து போட்டுடைத்தகதையாகவே இருக்கும்.

• • •

## ஈழத்தமிழர் அரசியலமைப்பு ... தொடர்ச்சி...

செம்மணி அரியாலை சிந்துப்பாத்தி மயானப் பகுதிகளில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட மனித எலும்புகள், மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ள சூழலில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சர்வதேச நீதி விசாரணைக்கான கோரிக்கைகளையும் மீறி, இலங்கை உள்ளக சட்டக் கட்டமைப்பிற்குள் தீர்வை முன்வைக்கும் முறைமை பற்றி அமைச்சர் விளக்கியிருக்கிறார்.

அப்போது குறுக்கிட்ட முன்னாள் வடமாகாண சபை யின் அமைச்சர் அனந்தி சசிதரன் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய சில விவகாரத்தில் நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தும், இதுவரை நடைமுறைக்கு வரவில்லையே எனக் கேள்விளைத் தொடுத்தபோது, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாத்திரம் மொட்டையாக பதிலளித்து விட்டுச் சென்றிருக்கிறார் அமைச்சர்..

ஐ.நாவின் அழுத்தத்தால் உருவாக்கப்பட்ட OMP எனப்படும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றி தகவல் அறியும் அலுவலகத்தின் செயற்பாட்டை, ஐ.நா பல சந்தர்ப்பங்களில் பாராட்டியது என்ற காரணத்தால், அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, உள்ளக நீதிக் கட்டமைப்பின் மூலம் விசாரணை என்று காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களிடம் விளக்கியிருக்கிறார்.

ஆகவே, சந்திரிகா, மகிந்த, ரணில், கோட்டாபய ஆகியோர் வழியில், அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் இதே "உள்ளக நீதி" என்ற புள்ளியிலேயே பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

ஆகவே, 80 வருடங்களுக்கும் மேலாக ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை பற்றிய நியாயங்கள் இலங்கை அரசால் மறுதலிக்கப்பட்டு வரும் நிலையில், சர்வதேச நீதியை நோக்கிய நகர்வுகளும் தேக்க நிலைக்கு வந்துவிட்டது என யாரும் கருத்திட்டால், அதில் ஆழமான அர்த்தம் இருக்கும்..

இத்தேக்க நிலைக்குத் தமிழ்த் தேசியக் கட்சிகள் பிரதான காரண- காரியம் என்பதும் பகிரங்கமான உண்மை. புவிசார் அரசியல் நோக்கில், வல்லாதிக்க அரசுகள், தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை புறக்கணிக்கிறது என்பதை விடவும், தமிழர்களின் அரசியல் பலத்தையும், சர்வதேச நீதிக்கான நகர்வுகளையும் தங்களின் சுயலாப கட்சி அரசியலாலும், ஒருமித்த குரல் ஒருங்கிணைப்பு இன்மையாலும் தமிழ்த் தேசியக் கட்சிகளே சிதைத்து வருகின்றன என்பதே கசப்பான யதார்த்தமாகும்.

செம்மணி, உலகின் மிகப்பெரிய மனிதப் புதைகுழிகளில் ஒன்று, என வர்ணிக்கப்பட்ட நிலையில், இதனை முழுமையாக இலங்கை ஒற்றையாட்சி அரசின் கீழ் இயங்கும் தொல்பொருள் மற்றும் தடயவியல் துறையினர் ஆய்வுகளை வழி நடத்துகின்றனர்.

நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் சர்வதேச நிபுணர்களின் நேரடி தலையீட்டைக் கோரியபோது, டி.என்.ஏ (DNA) பகுப்பாய்வு போன்ற சில தடயவியல் தேவைகளுக்கு மாத்திரமே வெளிநாட்டு உதவிகளைப் பெற ஆலோசிப்பதாக அரசாங்கம் உடனடியாக மறுத்துப் பதில் வழங்கியுள்ளது.

ஆகவே, 1970 - 80 களில் இருந்து சிங்களத் தலைவர்கள் மாறி மாறி ஆட்சியமைத்தாலும் தத்தமது கட்சி அரசியலுக்கு அப்பால், ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை விவகாரங்களில் ஒரு புள்ளியில் நிற்கின்றனர் என்பதையே அநுர அரசாங்கத்தின் மறுதலிக்கும் பதிலும் எடுத்துக் காட்டுகிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் நாடாளுமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் 'சர்வதேச நீதிப் பொறிமுறை' - 'இன அழிப்புக்கான சர்வதேச நீதி' என்று உரத்துப் பேசினாலும், நடைமுறையில் அவர்கள் இலங்கை அரசின் உள்ளகக் கட்டமைப்புகளோடு இணங்கிப் போகும் சூழல், 2015 ஆம் ஆண்டு முதல் தெரிய ஆரம்பித்து. 2026 இல் அது பகிரங்கமாகவே வெளிப்பட்டுள்ளது.

இப் பின்புலத்தில்தான், இலங்கை அரசு காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு மரணச் சான்றிதழ்கள் - நட்ட ஈடுகள் வழங்கி, 'நாங்கள் உள்ளக ரீதியாகப் பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறோம்' என்று சர்வதேச சமூகத்திற்குக் கணக்குக் காண்பித்து, ஐ.நா அழுத்தங்களில் இருந்து தப்பிக்கக் கூடிய அனைத்து இராஜதந்திர நகர்வுகளையும் கனகச்சிதமாக பூர்த்தி செய்து வருகிறது.

ஆகவே, ஈழத்தமிழர்களின் 'சர்வதேச நீதி பொறிமுறை' என்ற கூட்டுக் கோரிக்கை அமெரிக்க, இந்திய அரசுகளின், இலங்கை மீதான அரசியல் - பொருளாதாரச் செல்வாக்கினால், இந்தோ - பசுபிக் விவகார நோக்கில் தொடர்ந்து புறக்கணிக்கப்படும் ஆபத்துகள் உறுதியாகத் தெரிகின்றன.

இருந்தாலும், செம்மணி போன்ற பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்ந்து வெளிவருவது, இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச அரங்கில் பெரும் தார்மீக நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

ஆனால், அதனை ஒரு 'நம்பகமான' - 'உறுதியான' ஆவணமாக்கி, இராஜதந்திர ரீதியில் நகர்த்துவதற்கான ஆற்றல் எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவருக்கும் இல்லை என்பதை விடவும், அவர்கள் அமெரிக்க - இந்திய அரசுகளினால் கையாளப்படும் சக்திகளாக மாத்திரமே திகழ்கின்றனர் என்பதே கண்கூடு.

இப்பின்னணியில், ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச் சபையின் மக்களுக்கான தெளிவூட்டல் மற்றும் தீர்வுக்கான நகல் வரைபு, யாரை நோக்கி, யாருக்காக மேற்கொள்ளப்படவுள்ளது என்ற வினா தொக்கி நிற்கிறது!

அதுவும், ஆறாம் திருத்தச் சட்டத்தைத் "தாரக மந்திரம்" போல ஏற்றுக்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், "சுயநிர்ணய உரிமை" தான் நிரந்தர தீர்வு என்று துணிந்து சொல்ல தயங்கிக் கொண்டிருக்கும் இந்த 2026 ஆம் ஆண்டுச் சூழலில்...

ஆகவே, எந்த ஒரு அரசியல் கட்சியினதும் பின்புலங்களை கடந்து "ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபை" தனித்துவமான பெரும் அரசியல் சக்தியாக தமிழர்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும்..

சிங்கள அரசியல் தலைவர்கள் "உள்ளகப் பொறிமுறை" என்ற சமரசம் செய்ய முடியாத ஒற்றை நிலைப்பாட்டை ஒரே புள்ளியில் நின்று தக்க வைப்பது போன்று, இச் சபையும், "சுயநிர்ணய உரிமை" - "சர்வதேச நீதி பொறிமுறை" என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நிற்க வேண்டும்...

• • •







## ஈரானின் நினைவஞ்சலி... தொடர்ச்சி...

வழியாக கடல்வழிப் போக்குவரத்து மற்றும் முடக்கப்பட்ட ஈரானிய நிதிகளை விடுவிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்தின, ஆனால் நீடித்த அமைதியை நோக்கிய பெரிய முன்னேற்றத்திற்கான எந்த அறிகுறியும் இல்லை.

இஸ்ரேல் ஆரம்பத்திலிருந்தே ஈரானியத் தலைவர்க ளைக் குறிவைத்துக் கொல்வதை தனது போர் உத்தியின் மையப் பகுதியாக ஆக்கியிருந்தது. அமெரிக்க உளவுத்துறை தகவல்களின்படி, பிப்ரவரி 28 அன்று இஸ்ரேலியத் தாக்குதலுடன் இந்த மோதல் தொடங்கியது, அதில் கமெனி மற்றும் பல உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். பின்னர், வாஷிங்டன் பேச்சுவார்த்தை நடத்த நம்பியிருந்த ஈரானின் உயர்மட்ட தேசியப் பாதுகாப்பு அதிகாரி அலி லாரிஜானி மற்றும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் கமல் கராசி உள்ளிட்ட பலரையும் இஸ்ரேல் கொன்றது.

ஈரானின் உயர்மட்டப் பேச்சுவார்த்தையாளர்களான அராக்சி மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாஃப் ஆகியோரையும் இஸ்ரேல் இதேபோல் படுகொலை செய்ய முயற்சிக்கக்கூடும் என்று அமெரிக்க அதிகாரிகள் அஞ்சியதாக நியூயார்க் டைம்ஸ் வியாழக்கிழமை செய்தி வெளியிட்டது.இந்த அச்சம் மிகவும் அதிகமாக இருந்ததால், தெஹ்ரானை எச்சரிக்குமாறு பிராந்திய இடைத்தரகர்களை வாஷிங்டன் கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்த நம்பியிருந்த, அலி லாரிஜானி மற்றும் கமல் கராசி உள்ளிட்ட நடைமுறைவாத அதிகாரிகளை இஸ்ரேல் ஏற்கனவே கொன்றிருந்தது; இவர்கள் இருவரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபோது தாக்கப்பட்டனர்.

காலிபாஃப் இரண்டு முறை இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டார். மேலும், ஏப்ரல் மாதம், வான்ஸ் பேச்சுவார்த்தையிலிருந்து அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்த விமானத்தைத் தாக்குவதற்காக இரண்டு இஸ்ரேலிய விமானங்கள் தங்கள் வான்வெளிக்குள் நுழைவதை ஈரானிய உளவுத்துறை கண்டறிந்தது. இதனால், அந்த விமானம் அவசரமாகத் தரையிறங்கி, தெஹ்ரானுக்கு எட்டு மணி நேரப் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இஸ்ரேலியத் தாக்குதல்களுக்கு எதிராக அமெரிக்க உத்தரவாதங்களை தெஹ்ரான் கோரியதைத் தொடர்ந்து, ஈரானின் 70 பேர் கொண்ட தூதுக்குழுவிற்கு பாகிஸ்தானியப் போர் விமானங்கள் இஸ்லாமாபாத்திற்குச் சென்று வர பாதுகாப்பு அளித்தன.

அமெரிக்கா ஒரு ஒப்பந்தத்தை விரும்பியது, ஆனால் அதன் சொந்த நட்பு நாடோ, அதில் கையெழுத்திடத் தேவையான ஆட்களை வேட்டையாடியது. வேன்ஸைச் சந்திக்க விமானத்தில் சென்ற ஒவ்வொரு பேச்சுவார்த்தையாளரும், தாங்கள் தரையிறங்க முடியாமல் போகலாம் என்பதை அறிந்தே சென்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த முறை இஸ்ரேல் தாக்குதல் நடத்துமாக இருந்தால் அது மிகப்பெரும் போராக மாறும் என்பது தான் யதார்த்தம்.

• • •

## ஐக்கிய நாடுகள் ... தொடர்ச்சி...

பெண்களுக்கான உள்ளடக்க நீதியைப் பற்றிப் பேசுகிறது.

உள்ளடக்க நீதி என்பது ஒரு செயல்முறையை விட முடிவுகளின் மூலம் நியாயத்தை மதிப்பிடுகிறது; அது சம உரிமைகளை அல்ல, உரிமைகளின் சமமான பங் கீட்டை ஆதரிக்கிறது. CEDAW கூறுகிறது, "ஆண்களுக்கு இணை யான உரிமைகளை பெண்கள் அனுபவிப்பதை உறுதி செய்வதற்கு, முறையான சமத்துவம் மட்டும் போதுமானதாக இருக்காது என்ற அங்கீகாரத்திலிருந்துதான் உள்ளடக்கச் சமத்துவம் என்ற கருத்து உருவானது. வெளிப்படையாகப் பாலினப் பாகுபாடற்ற ஒரு கொள்கை, பெண்களை நேரடியாக விலக்காவிட்டாலும், நடைமுறையில் பெண் களுக்கு எதிரான பாகுபாட்டிற்கு வழிவகுக்கக்கூடும்."

மாறாக, சமத்துவம் என்ற பெயரில், ஐ.நா. ஆண்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டுகிறது. அது "ஆணாதிக்கத்தின் நஞ்சைக்" கண்டிக்கிறது, ஆண் ஆதிக்க உலகத்தைக் கடுமையாகச் சாடுகிறது, மற்றும் பாலின-எதிர்ப்பு இயக்கம் குறித்து விவாதிக்கிறது. தீவிர பெண்ணிய மற்றும் LGBTQIA+ கொள்கைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் நோக்கங்களைக் கொண்ட குழுக்களாகப் பாலின-எதிர்ப்பு இயக்கம் வரையறுக்கப்படுகிறது. இந்தக் கொள்கைகளைக் கேள்வி கேட்பது அல்லது ஆண்களுக்கு இணையான கொள்கைகளைப் பரிந்துரைப்பது கூடப் பாலின-எதிர்ப்பாகத் தெரிகிறது.

முன்னதாக, ஐ.நா.வின் கொள்கைகள் விரைவில் மோசமடைய வாய்ப்புள்ளது என்று நான் குறிப்பிட்டிருந்தேன். பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் 2026 டிசம்பர் 31 அன்று பதவி விலகுகிறார். அவருக்குப் பதிலாகப் பதவியேற்பதற்கான முன்னணிப் போட்டியாளர், தீவிர முற்போக்கு சிந்தனையாளரான மிஷேல் பாஷெலெட் ஆவார். இவர் ஐ.நா. பெண்கள் அமைப்பைத் தொடங்கி, 2010 முதல் 2013 வரை அதன் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றினார். இதற்குப் பிறகு, அவர் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையராக (2018 முதல் 2022 வரை) பணியாற்றினார்.

ஐ.நா.வில் பணியாற்றிய காலங்களுக்கு இடையில், பாஷெலெட் சிலியின் ஜனாதிபதியாக இரண்டு முறை பதவி வகித்தார். சிலியின் சோசலிஸ்ட் கட்சியின் முக்கிய உறுப்பினரான இவர், தனது அமைச்சரவையில் 50 சதவீதப் பெண் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்கியதுடன், அரசாங்கத்தில் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்க அரசியல் ரீதியான இடஒதுக்கீட்டு முறையையும் அறிமுகப்படுத்தினார்; மேலும், பெண்கள் மற்றும் பாலின சமத்துவத்திற்கான அமைச்சகம் ஒன்றையும் நிறுவினார் ஆனால், ஆண்களுக்கென இது போன்றதொரு அமைச்சகம் எதுவும் இல்லை.

மேலும், இங்கு பின்பற்றப்பட்ட சமத்துவம் என்பது சமநீதியாகும், ஏனெனில் அது பெண்களுக்குச் சலுகை களை வழங்கியது.

**ஐக்கிய நாடுகள் சபையில் இருந்தபோது, பாச்செலெட் முன்னெடுத்த சில உலகளாவிய முயற்சிகளில் பின் வருவன அடங்கும்:**


- பொது இடங்களில் நிகழும் பாலியல் வன்முறையைக் கையாள்வதற்காக, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையற்ற பாதுகாப்பான நகரங்கள். இதில் "பாலியல்" என்ற சொல் முக்கியமானது. பெண்களை (19%) விட ஆண்கள் (81%) பொது இடங்களில் அதிக உடல்ரீதியான வன்முறையை அனுபவிக்கிறார்கள் என்பதை ஐ.நா. கூட ஒப்புக்கொள்கிறது. இருப்பினும், ஆண்கள் பாலியல் வன்முறையை அனுபவிக்கும் விகிதம் தெளிவாக இல்லை, ஏனெனில் பெண்களை விட ஆண்கள் அத்தகைய துஷ்பிரயோகங்களை மிகக் குறைந்த விகிதத்தில் தெரிவிக்கின்றனர்.
- அடிமட்ட அளவில் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக, பிரத்தியேகமாக அவர்களுக்குப் பணம் வழங்கும் பாலின சமத்துவத்திற்கான நிதி. ஆண்கள் மற்ற ஐ.நா. பாலின நிதிகளை அணுகலாம், ஆனால் அது பாலின சமத்துவமின்மையை அகற்றுவதற்காக மட்டுமேயன்றி, தங்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக அல்ல. ஆண்கள் பாலின கூட்டாளிகளாகவும் "மாற்றத்தின் முகவர்களாகவும்" செயல்பட வேண்டும்.
- மோதல் மற்றும் மோதலுக்குப் பிந்தைய பகுதிகளில் இடைக்கால நீதி மற்றும் பெண்களின் மனித உரிமைகளை ஆதரிப்பதற்காக, மோதலுக்குப் பிந்தைய சமூகங்களில் பெண்களுக்கான நீதிக்கான அணுகலை அதிகரித்தல்.

ஒவ்வொருவருக்கும் அவரவர் நேரத்திலும் பணத்திலும் அமைதியான முறையில் பாகுபாடு காட்ட உரிமை உண்டு. ஆனால், ஐ.நா.விற்கு முதன்மையாக அதன் உறுப்பு நாடுகளிடமிருந்து பெறப்படும் கட்டாய மதிப்பீட்டு மற்றும் தன்னார்வப் பங்களிப்புகளாலேயே நிதி வழங்கப்படுகிறது; அதாவது, தனிநபர்களிடமிருந்து பெறப்படும் வரிப் பணத்தின் மூலமே. அந்த தனிநபர்களில் பாதி பேர் ஆண்கள், மேலும் பலர் என்னைப் போன்ற மாற்றுக்கருத்து கொண்ட பெண்கள்.

ஒரு நல்ல செய்தி என்னவென்றால், சில உறுப்பு நாடுகள்—குறிப்பாக அமெரிக்கா—தங்கள் பங்களிப்புகளை நிறுத்தி வைத்திருப்பதால், ஐ.நா.வின் நிதிநிலை சரிவைச் சந்திக்கப் போவதாக வதந்திகள் பரவி வருகின்றன. அமெரிக்கா மட்டும் வழக்கமான நிதிநிலை அறிக்கைக்கு 2.196 பில்லியன் டாலர்களையும், தனியான அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கு 1.8 பில்லியன் டாலர்களையும் செலுத்த வேண்டியுள்ளது. இது ஐ.நா.வின் மொத்த நிதியில் சுமார் கால் பங்காகும். அது இல்லாமல் போனால், ஐ.நா.வின் அந்தஸ்து வெகுவாகக் குறைந்துவிடும்.

**நன்றி: Tyler Durden**




## தேசியத் தமிழ் சமூகப் பேர ... தொடர்ச்சி...

வாழும் தமிழ் மக்களின் நலன்களைப் பேணுவதற்காக முன்மொழியப்பட்ட ஒரு கட்டமைப்பாகும்.

இப்பேரவையானது பாராளுமன்றத்துடனும் அர சாங்கத்துடனும் முறையான கொள்கை ரீதியான ஈடு பாட்டை மேற்கொள்வதற்கும், மலையக மக்களின் பிரத்தி யேகத் தேவைகளைச் சட்டப்பூர்வமாகப் பிரதிநிதித் துவப் படுத்துவதற்கும் வழிவகுக்கும் என்ற விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மலையகத்தமிழர்கள்இலங்கையின்பொருளாதார செழுமைக்காகத் தங்களின் வாழ்வையே அர்ப்பணித்த ஒரு உன்னதமான சமூகமாகும். அவர்கள் இன்னும் 'தோட்டத் தொழிலாளர்கள்' என்ற அடைமொழிக்குள்ளேயே முடங்கிக் கிடக்காமல், நாட்டின் சமத்துவமுள்ள குடிமக்களாக மாற வேண்டுமாயின், காணி உரிமை, முறையான வீட்டு வசதி, தரமான கல்வி மற்றும் தடையற்ற பொருளாதார வாய்ப்புகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருடன் நடத்திய இந்தச் சந்திப்பானது, மலை யக மக்களின் கோரிக்கைகளை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வதில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இலங்கை அரசாங்கம் பொருளாதார மறுசீரமைப்புகளை மேற்கொள்ளும் அதேவேளையில், மலையக மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கும், அரசியலமைப்பு ரீதியான தீர்வுகளுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். அப்போதுதான் உண்மையான நல்லி ணக்கமும், தேசிய அபிவிருத்தியும் சாத்தியமாகும்.

## பிரித்தானிய காலனி ... தொடர்ச்சி...

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட கலாச் சாரப் பொருட்களைத் திருப் பிக் கொடுப்பதற்கான நடை முறைகளையும், சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான ஒத்து ழைப்பையும் இந்த ஒப்பந்தம் வகுக்கிறது என்று சுவிஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

திருப்பிக் கொடுக்கப்பட்ட 18 கலைப்பொருட்க ளில், இரண்டு சூரிச்சில் உள்ள ரீட்பெர்க் அருங் காட்சியகத்திலிருந்தும், இரண்டு ஜெனீவா இனவி யல் அருங்காட்சியகத்திலிருந்தும், 14 சூரிச் பல்கலைக் கழகத்தில் உள்ள இனவியல் அருங்காட்சியகத் திலிருந் தும் வந்தவை என்று நைஜீரியாவின் தேசிய அருங்காட்சி யகங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் ஆணையம் (NCMM) கூறியுள்ளது.

"நமது கலாச்சார பாரம்பரியத்தைத் திரும்பப் பெறுவது என்பது கலைப்பொருட்களை மீட்பதை விட மேலானது. அது உரையாடல், நம்பிக்கை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பின் சக்தியைப் பிரதிபலிக்கிறது," என்று நைஜீரிய கலாச்சார அமைச்சர் X தளத்தில் எழுதியுள்ளார். அந்தப் பொருட்களில் அரச தலைகள், நினைவுப் பலகைகள், முகமூடிகள், மணிகள், செதுக்கப்பட்ட யானைத் தந்தங்கள், ஒரு குதிரை வீரன் உருவம், ஒரு நினைவு வெண்கலத் தலை மற்றும் அரச மூதாதையர் ஆலயங்களிலிருந்து பெறப்பட்ட 18 ஆம் நூற்றாண் டின் தந்தம் ஆகியவை அடங்கும். தற்போதைய நைஜீரியாவில் உள்ள பெனின் இராச்சியத்தின் அரச அரண்மனையிலிருந்து 1897 ஆம் ஆண்டில் பிரித்தானிய துருப்புக்களால் கொள்ளையடிக்கப்பட்ட ஆயிரக்கணக் கான கலாச்சார மற்றும் சடங்கு கலைப்பொருட்களில் இவையும் அடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



## இலங்கையில் பன்பொழியாற்றலின் முக்கியத்துவம்

இலங்கை என்பது பல்வேறு இன, மத, கலாசாரப் பின்னணி கொண்ட ஒரு சிறிய பன்முகத்தன்மை மிக்க நாடு. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகள் அரச கரும மொழிகளாகவும், ஆங்கிலம் தொடர்பு மற்றும் சர்வதேச மொழியாகவும் பயன்படுகின்றன. இத்தகைய சூழலில் பன்மொழியாற்றல் என்பது ஒரு ஆடம்பரம் அல்ல, மாறாக தேசியத் தேவையாகும்.

**முதலில் பன்மொழியாற்றல் என்றால் என்ன? ,என்று பார்ப்போம்.**
பன்மொழியாற்றல் என்பது ஒருவர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளை திறம்பட பேசவும், புரிந்துகொள்ளவும், எழுதவும், வாசிக்கவும் கூடிய திறன் ஆகும். இலங்கையின் சூழலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளை அறிவது பன்மொழியாற்றலுக்கு சிறந்த எடுத்துக்காட்டோடு இன்றியமையாத விடயமாக காணப்படுகிறது.

அதன் முக்கியத்துவத்தை பார்ப்போமானால் தேசிய ஒருமைப்பாட்டை கூறலாம்.பல இனங்கள் வாழும் இலங்கையில் மற்றவர் மொழியை அறிவது தவறான புரிதல்களை நீக்கி, நம்பிக்கையை ஏற்படுத்தும்.

இரண்டாவதாக சிங்களம், தமிழ் என இரு அரச மொழிகளையும் அறிவது, அரச சேவையை அனைத்து மக்களுக்கும் சமாக கொண்டு செல்ல உதவும். தற்போதைய

உலகப் போட்டித்தன்மையில் ஆங்கில அறிவு இல்லாமல் உயர்கல்வி, தொழில்நுட்பம், வெளிநாட்டு வேலைவாய்புகளில் போட்டியிட முடியாது.

பன்மொழிகளை கற்பதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன. முக்கியமாக அறிவுசார் வளர்ச்சி ஏற்படுகிறது. பல மொழி கற்பது மூளையின் நினைவாற்றல், கவனம், பிரச்சினை தீர்க்கும் திறனை அதிகரிக்கிறது.

வேலைவாய்ப்பு தன்மை அதிகமாக காணப்படுகிறது. சுற்றுலா, மொழிபெயர்ப்பு, கல்வி, வங்கி போன்ற துறைகளில் கூடுதல் வேலை வாய்ப்புகள் கிடைக்கின்ற தன்மைகள் காணப்படுகின்றன. வேறு மொழி பேசும் மக்களின் இலக்கியம், பண்பாடு, சிந்தனையை நேரடியாக உணர கூடியதாக உள்ளன. சமூக நல்லிணக்கம் அதிகரிக்கும், இன முரண்பாடுகள் குறையும், பொருளாதாரம் வளரும். இவ்வாறாக பல நன்மைகளை நாம் பெறக்கூடியதாக அமைகின்றது.

ஆகவே தொகுத்து நோக்குமிடத்து இன்றைய காலகட்டத்தில் பன்மொழியாற்றல் என்பது இலங்கையின் எதிர்கால வளர்ச்சிக்கான இன்றியமையாத தேவையாக காணப்படுகிறது.

**சு.திகழினி**
**கன்னியாகுமரி**

## உறவுகளின் சங்கமம்

விண்ணில் தோன்றும்
விண்மீன்கள்
போலே
மண்ணில் மலரும் உன்னத
உறவுகள்
அன்பின் பாதையில் நம்மை
அழைத்துச்
செல்லும் தூய நல்வழிகாட்டி
ஆகும்...
துன்பம் சூழும் காரிருள் நேரத்தில்
இன்பம் தரும் இனிய ஒளிவிளக்கு
உறவின் பெருமை உணர்ந்தவர்
நெஞ்சில்
என்றும் நிலைக்கும் பேரானந்தம்
இதுவே...
அன்னை தந்தையின் பாசப்
பிணைப்பு
அகிலத்தில் என்றும் அழியாத
காவியம்
உடன் பிறந்தவர்களின் மாறா நேசம்
என்றும்
உயிரைத் தாங்கும் வலிமையான
கவசம்...
தோள் கொடுக்கும் தோழமையின்
நட்பு
நம்மை உயர்த்தும் நல்வழித்
துணைவன்
இத்தகைய உறவுகள் சூழ்ந்த
வாழ்க்கை
இறைவன் தந்த பெரும்பேரு
அன்றோ...
காலங்கள் பல கடந்து போனாலும்
மாறாத அன்பு உறவின் இலக்கணம்...
தனிமைத் துயரை விரட்டி அடிக்கும்
இனிய உறவுகள் என்றும் நம்சொத்து!பாசக்
கயிற்றால் இதயங்களை
இணைத்து
வாழ்வை அழகாக்கும் உன்னதக் கலை
உறவுகளைப் போற்றி நாம் வாழ்ந்தால்
உலகமே என்றும் நம் கையில்...

**மு.சந்தியா**
**செல்வநாயகபுரம்**





# தாயகமும் வாழ்வும்





